admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி
NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்

| Vol: 04 | Issue: 024 | 4 Pages | 24.08.2026 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 04 | இதழ்: 024 | 4 பக்கங்கள் | 24.08.2026 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |









**யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு**

**விளக்கம்: காக்க வேண்டியவற்றுள் எவற்றைக் காக்காவிட்டாலும் நாவையாவது காக்கவேண்டும்; காக்கத் தவறினால் சொற் குற்றத்தில் அகப்பட்டுத் துன்புறுவர்.**

# தவெகவின் 100 நாள் ஆட்சியில் அதிகம் பாதித்தது விவசாயிகள் வறட்சி நிதி தர பணம் இல்லை கார் வாங்கி தர காசு இருக்கா? உதயநிதி ஸ்டாலின் கேள்வி

தஞ்சாவூர், ஆக. 24

தவெகவின் 100 நாள் ஆட்சியில் அதிகம்பாதித்ததுவிவசாயிகள்தான். விவசாயிகள் வறட்சி நிதி தர பணம் இல்லை. ஆனால்எம்எல்ஏக்களுக்கு கார் வாங்கி தர காசு இருக்கா? என்று உதயநிதி ஸ்டாலின் கேள்வி எழுப்பி உள்ளார். தஞ்சாவூர் தெற்கு மாவட்ட திமுக வர்த்தகர் அணி துணை அமைப்பாளர்வி.கே.வெங்கடேசன் இல்ல திருமண விழா பட்டுக்கோட்டை கொண்டிகுளம் திருமண மண்டபத்தில் நேற்று நடந்தது. தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமை வகித்து திருமணத்தை நடத்தி வைத்து பேசியதாவது: புதிய அரசு அமைந்த 100 நாட்களில் அதிகம் பாதித்தது விவசாயிகள் தான். மு.க.ஸ்டாலின் முதல்வராக இருந்தபோது கடந்த 5 ஆண்டும் மேட்டூரில் இருந்து ஜூன் 12ம் தேதி தண்ணீரை திறந்து விட்டிருக்கிறார். இவர்கள்ஆட்சிக்கு வந்ததும் இன்றைக்கு என்ன நிலைமைஎன்றால்ஆகஸ்ட்முடியும் தருவாயிலும் இன்னும் காவிரியில் தண்ணீர் வரவில்லை. இன்றைக்கு டெல்டாவில் குறுவை சாகுபடி மொத்தமாக பாதிக்கப்பட்டிருக்கு. அதனால் தான் சட்டமன்றத்தில் விவசாயிகளுக்கு தயவு செய்து இந்த அரசு வறட்சி நிவாரணம் கொடுக்கணும் என்றேன்.

அதற்கு முதல்வர் ஏதாவது பதில் சொன்னாரா?. பதில் சொல்றேன்னு சொல்லிஏற்கனவேசிறப்புதொகுப்பு கொடுத்துட்டோம் என்றார். அதற்கு சிறப்பு தொகுப்புக்கும், வறட்சி நிவாரணத்துக்கும் வித்தியாசம் இருக்கு. முதலில் தெரிஞ்சுகிட்டு பேசுங்க என்று சொன்னேன். விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் கொடுக்க நிதி இல்லை என்று சொல்லி விட்டார்கள். ஆனால் ஆளுங்கட்சி எம்எல்ஏக்களுக்கு கார் வாங்கி கொடுப்பதற்கு இந்த அரசு முடிவு செய்துள்ளது விவசாயிகளுக்கு தேர்தல் வாக்குறுதியில் சொன்ன மாதிரி கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்வதற்கு நிதி



இல்லையென்று முதல்வர் சொல்லி விட்டார். ஆனால்எம்எல்ஏக்களுக்கு கார் வாங்கி தருகிறேன் என்று முதல்வர் கூறுகிறார். திமுக உறுப்பினர்கள் யாருக்கும் கார் தேவை இல்லை. இந்த அரசு கொடுக்கக்கூடிய அந்த வாகனம் தேவையில்லை. முதலில் விவசாயிகளின் பிரச்னையை தீர்த்து வைங்க என்று நமது தலைவர் சொல்லி விட்டார். அதுக்கும் சண்டைக்கு வர்றாங்க, அது எப்படி நீங்க வேண்டாம்னு சொல்லலாம் என்று? நான் என்ன சொன்னேன், நீங்க வாங்கிக்கோங்க. திமுக தலைவர் இந்த ஸ்டாண்ட் எடுத்திருக்காரு. விவசாய பிரச்னையை முதல்ல கவனம் செலுத்துங்க, அதற்கு நிதி இல்லைன்னு சொல்லிட்டீங்க. ஆட்சிக்கு வந்தவுடனே கஜானாவை துடைச்சு வச்சிட்டு போயிட்டோம்னு சொல்றீங்க. தேர்தல் வாக்குறுதி எதையும் நிறைவேற்றல. வருஷத்துக்கு 6 காஸ் சிலிண்டர் கொடுப்பேன்னீங்க, கொடுக்கல. வேலையில்லா இளைஞர்களுக்கு மாசம் 4000 ரூபாய் கொடுக்குறேன்னு சொன்னீங்க, அதை கொடுக்கல. வாக்குறுதியா சொன்ன எதையும் நிறைவேற்றாம, இன்னைக்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கார் வாங்கி தர்றேன்னு சொல்றதை திமுக ஒத்துக்காது, எங்களுக்கு வேணாம் அப்படின்னு சொல்லிட்டேன். இன்னைக்கு சட்டமன்றத்துல நடக்குறதை நீங்க அத்தனை பேரும் தொலைக்காட்சியில நேரலையில பாத்துட்டு இருக்கீங்க. இந்த ஆளுங்கட்சியினர் இன்னைக்கு ஒவ்வொரு நாளும் என்னென்ன கூத்தெல்லாம் அடிச்சுட்டு இருக்காங்கங்கிறதை நீங்க லைவ்ல பாத்துட்டு இருக்கீங்க. முன்னெல்லாம் சபையில பேசுவாங்க, கேள்வி கேட்பாங்க, அதற்கு பதில் சொல்வாங்க. கேள்வி கேட்டா பதில் சொல்லலாம், பாட்டு பாடுனா நான் எப்படி பாட்டு பாட முடியும்? இப்படி ஒரு கேடுகெட்ட ஆட்சி இன்னைக்கு நடந்துட்டு இருக்கு. இதையே கொஞ்சம் ரீவைண்ட் பண்ணி பாருங்க. போன 5 வருஷம் நம்முடைய தலைவர், இந்தியாவிலேயே நம்பர் ஒன் ஸ்டேட்டாக நம்முடைய தமிழ்நாட்டை கொண்டு வந்தாங்க. 11.19 சதவீத வளர்ச்சியோடு இந்தியாவுல டெவலப்பிங் ஸ்டேட்ல நம்பர் ஒன் ஸ்டேட்டாக தமிழ்நாடு இருந்தது. இன்னைக்கு அதை கொண்டு போய் பாதாளத்துல தள்ளிட்டாங்க. இன்றைக்கு இந்த அரசாங்கம்ஒருடம்மிஅரசாங்கமாக, தமிழ்நாட்டினுடைய வளர்ச்சியை பின்னாடி இழுத்துட்டு போயிட்டு. தமிழ்நாட்டுல நடக்குற எந்த பிரச்னையைப் பற்றியும் இன்று இருக்கக்கூடிய முதலமைச்சருக்கு கவலை கிடையாது. இதையெல்லாம் இன்னைக்கு மக்கள் பார்த்து இப்பதான் உணர ஆரம்பிச்சிருக்காங்க. விரைவில் இந்த ஆட்சியாளர்களுடைய ஆணவத்திற்கும், கோமாளித்தனத்திற்கும் மக்கள் ஒரு சரியான பாடத்தை புகட்டுவாங்க. இவ்வாறு அவர் பேசினார். ''சட்டமன்றத்துல நாங்க கேட்கக்கூடிய எந்த கேள்விக்கும் முதலமைச்சர் எந்திரிச்சு பதில் சொல்றது கிடையாது. ஒரு மூன்று அமைச்சர்கள்தான் இருக்குறாங்க. அனைத்து கேள்விகளுக்கும் அந்த மூன்று அமைச்சர்கள்தான் எந்திரிச்சு பதில் சொல்றாங்க. அதுவும் நாங்க கேட்கக்கூடிய கேள்விக்கான பதில் கிடையாது. அனைத்தையும் திசை திருப்புற மாதிரி, டைவர்ஷன் டேக்டிக்ஸ் அவ்வளவுதான்'' என்று உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.\ திருமண விழாவில் உதயநிதி ஸ்டாலின் பேச தொடங்கியதும், ''தஞ்சாவூர் மாவட்டத்தில் பேசும்போது ரொம்ப ஜாக்கிரதையா பேசணும். நாம பேசலனாலும் பரவாயில்லை, கீழே இருந்து பேசி நம்மள மாட்டி விட்டுருவாங்க. கைது நடவடிக்கைக்கு பயந்தவன் உதயநிதி கிடையாது என்பது அரசுக்கு இந்நேரம் தெரிந்திருக்கும்'' என்றார். ''அமைச்சர்கள், ஆளுங்கட்சியோட சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் மக்கள் பிரச்னை பேசுவதற்கு சட்டசபைக்கு வரல. அவங்களுக்கு தேவை எல் லாம் அன்னைக்கு ஒரு நாலு ரீல்ஸ். இவங்க சர்க்கார் நடத்துறாங்களா இல்லை சர்க்கஸ் கம்பெனி நடத் துறாங்களான்னு கேட்குற அளவுக்கு தான் இன்னைக்கு அரசினுடைய பெர்பார்மன்ஸ் இருக்கு'' என்று உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

# ஈரானுடனான போரில் அமெரிக்கா தோல்வியடைந்துவிட்டதுமசூத் பெசெஷ்கியன்



இஸ்ரேல் ஆக. 24

இஸ்ரேலுக்கு ஆதரவாக ஈரான் மீது அமெரிக்கா ராணுவம் கடந்த பிப்ரவரி 28ந்தேதி தாக்குதல் நடத்தியது. இதில் ஈரான் உச்ச தலைவர் உள்பட பலர் கொல்லப்பட்டனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து உலகநாடுகளில் 30 சதவீதத்துக்கு மேல் எரிபொருள் வினியோகம் செய்ய பயன்படுத்தப்படும் ஹார்முஸ் நீரிணையை மூடுவதாக ஈரான் அறிவித்தது.6 மாதங்களுக்கு மேலாக நீடித்து வரும் இந்த தாக்குதல் மற்றும் பிரச்சி னையில் ஹார்முஸ் நீரிணையை கைப்பற்றும் முயற்சியில் அமெரிக்கா பெரும் தோல்வி அடைந்தது. இது நேரடியாக ஈரானுக்கு சாதகமாக அமைந்தது. இதனிடையே ஹார்முஸ் நீரிணையை ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்தி முழுவதுமாக கைப்பற்றும் முயற்சியில் அமெரிக்கா தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. அமெரிக்கா தோல்வியடைந்துவிட்டதுஇதற்கிடையே ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியன் ஈரான் உடனான போரில் அமெரிக்கா தோல்வியடைந்து விட்டதாக பகிரங்கமாக அறிவித்தார். இதுகுறித்து ஈரான் அரசு செய்தி நிறுவனத்துக்குஅவர்பேட்டிஅளித்தார்.அப்போதுஅவர்அதில்கூறியதாவது: ஹார்முஸ் நீரிணையின் மீதான கட்டுப்பாடு மற்றும் அமெரிக்காவின் கோரிக்கைகளுக்கு பணிய மறுத்ததை ஈரான் தனது வெற்றியாக கருதுகிறது. இதனால் உலக நாடுகள் வெறுக்கத்தக்க நாடாக அமெரிக்கா மாறியுள்ளது. ஈரானுடனான போரில் அமெரிக்கா முழுவதுமாக தோல்வியடைந்து சரணாகதி அடைந்துவிட்டது. இவ்வாறு அவர் கூறினார்.பொருளாதார தடைஇதற்கிடையே, ஈரானின் அணுசக்தி திட்டத்தை முடிவுக்கு கொண்டு வரவும், ஹார்முஸ் நீரிணையை மீண்டும் திறக்கவும் ஈரான் மீது முன்னெப்போதும் இல்லாத பொருளாதார போரை தொடுப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் அறிவித்துள்ளார். அதாவது தெஹ்ரானுக்கு ஆதரவு அளிக்கும் எந்தவொரு நாடு அல்லது நிதி நிறுவனமும் கடுமையான பொருளாதார விளைவுகளைச்சந்திக்கநேரிடும்என்றுடிரம்ப்எச்சரித்துள்ளார்.இதனிடையே ஹார்முஸ் நீரிணை அமெரிக்காவின் ஒரு பகுதியென மீண்டும் ஒருமுறை டிரம்ப் அறிவித்தார். இதற்கு ஈரான் கடுமையான பதிலடி தெரிவித்துள்ளது. ஈரான் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் இஸ்மாயில் பகாயி, "தீவிரமான பொருளாதாரத்தடைகளை அமெரிக்க முற்றுகையுடன் இணைப்பது, உலக நாடுகளின் இறையாண்மையைப் பறிக்கும் செயல். இது மீண்டும் ஒரு முழு அளவிலான பாரம்பரிய காலனி ஆதிக்கத்துக்கு வழிவகுக்கும்" என்றுள்ளார்.மாற்று வழிகள்ஹார்முஸ் நீரிணை மூடப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து விவாதிக்க பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான் மற்றும் சவுதி இளவரசர் முகமது பின் சல்மான் ஆகியோர் பாரிசில் சந்திக்க உள்ளனர். நீரிணையை தவிர்த்து மாற்று வழிகளில் வர்த்தகத்தை மேற்கொள்வது குறித்து அவர்கள் ஆலோசிக்க திட்டமிட்டுள்ளனர்.

# ஒடிசாவில் இருந்து சிங்கப்பூருக்கு சென்ற பனாமா நாட்டு கப்பல் வங்கக்கடலில் மூழ்கியது




புதுடெல்லி, ஆக. 24

பனாமா நாட்டைச் சேர்ந்த எம்.வி. ஓசேன் வின்னர் என்ற சரக்கு கப்பல், ஒடிசாவில் இருந்து 1,700 டன் ஹெமடைட் மற்றும் மேக்னடைட் போன்ற இரும்புத் தாதுக்களை ஏற்றிக்கொண்டு நேற்று முன் தினம் (வெள்ளிக்கிழமை) சிங்கப்பூர்புறப்பட்டுச்சென்றது. கப்பலில் 24 மாலுமிகள் இருந்தனர். இவர்களில் சீனாவைச் சேர்ந்தவர்கள் 20 பேர், மியான்மர் நாட்டைச் சேர்ந்தவர்கள் 3 பேர், ஒருவர் வங்காளதேசத்தைச் சேர்ந்தவர். இந்த கப்பல் வங்கக்கடலில் ஒடிசா மாநிலத்தின் பாராதீப் கடற்கரையில் இருந்து சுமார் 240 நாட்டிக்கல் மைல் தொலைவில் சென்றபோது திடீரென்று தொழில்நுட்பக் கோளாறு காரணமாக கடலில் மூழ்கத் தொடங்கியது. நேற்று பகல் 11.48 மணியளவில் கப்பலுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது. இதையடுத்து கப்பலை இயக்கும் நிறுவனம் ஸ்ரீவிஜயபுரத்தில் உள்ள கடல்சார் ஒருங்கிணைப்பு மையத்துக்கு தகவல் கொடுத்தது. இதையடுத்து கப்பலின் மாலுமிகள் அவசர அழைப்பு கொடுத்தனர். உடனடியாக தேடுதல் மற்றும் மீட்புப் பணிக்காக கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தினர் அங்கு விரைந்தனர். இந்திய கடலோர காவல் படை, அப்பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த பிற வணிகக் கப்பல்களுக்கும் எச்சரிக்கை விடுத்து, மீட்புப் பணியில் ஈடுபடச் செய்தது. ஐசோபோஸ் என்ற வர்த்தகக் கப்பலும் அங்கு அனுப்பப்பட்டது. உடனடியாக மீட்புப் பணிகள் தொடங்கப்பட்டன. இதில் 2 பேர் உடனடியாக உயிருடன் மீட்கப்பட்டனர். மற்ற 22 பேரைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. ஹெலிகாப்டர்கள் மற்றும் கப்பல்கள் உதவியுடன் தேடும் பணி முடுக்கிவிடப்பட்டுள்ளது. தொடர்ந்து வரத் மற்றும் அன்மோல் ஆகிய கப்பல்களும் தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ளன. தேடுதல் பணிக்காக ஸ்ரீவிஜயபுரத்தில் இருந்து விஜித் கப்பலும் அனுப்பப்பட்டது. கடலில் மூழ்கிய கப்பல் 225 மீட்டர் நீளமும், 32.26 மீட்டர் அகலமும் கொண்டது. எம்.வி. ஓசேன்வின்னர்கப்பல்மூழ்கியபகுதியில்நிற்கும்மற்றகப்பல்களுக்கு கடலோர காவல் படை எச்சரிக்கை செய்துள்ளது. மீட்புப் பணியில் அந்தக் கப்பல்களும்உதவிஅளிப்பதற்காகஎச்சரிக்கையாகஇருக்குமாறுஅறிவுறுத்தி இருக்கிறோம் என்று காவல்துறை உயர் அதிகாரி கூறினார். கப்பல் மூழ்கியதற்கான காரணம் இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. தொழில்நுட்பக் கோளாறால் கப்பல் மூழ்கியதா? அல்லது மோசமான வானிலையால் மூழ்கியதா? என்பது குறித்து விசாரணை நடந்து வருகிறது. தேடுதல் பணியும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

# தேனியில் வாழை இலை விலை உயர்வு



தேனி, ஆக. 24

தேனி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் வாழை இலை விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. கடந்த வாரம் வரை ரூ.1,500க்கு விற்கப்பட்ட ஒரு கட்டு வாழை இலை, தற்போது ரூ.4,000 வரை விற்பனையாவதால் பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். தேனி மாவட்டசந்தைகளுக்குவழக்கமாகவரும்வாழைஇலைகளின் வரத்து கடந்த சில நாட்களாக கணிசமாக குறைந்துள்ளது. வரத்து குறைவு ஒருபுறம் இருக்க, மறுபுறம் ஆவணி மாத தொடர்முகூர்த்தநாட்கள்மற்றும்ஓணம்பண்டிகைஅடுத்தடுத்து வருவதால் வாழை இலையின் தேவை பல மடங்கு அதிகரித்துள்ளது. தேவையை பயன்படுத்தி, தேனி சந்தையில் 180 இலைகள் கொண்ட ஒரு கட்டு வாழை இலையின் விலை ரூ.4,000 ஆக உயர்ந்துள்ளது. சில்லறை விற்பனையில் ஒரு இலை ரூ.25 முதல் ரூ.30 வரை விற்கப்படுகிறது. ஓணம் பண்டிகை நெருங்குவதால் வரும் நாட்களில் இதன் விலை மேலும் உயரக்கூடும் என்று வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

# மதுரை: இளம்பெண்ணை கர்ப்பமாக்கிய டாக்டர் மீது வழக்குப்பதிவு

மதுரை, ஆக. 24

மதுரை திருமங்கலத்தைச் சேர்ந்த இளம்பெண்ணை ஆசை வார்த்தை கூறிகர்ப்பமாக்கியகாரைக்குடியைச்சேர்ந்தடாக்டர்மீதுவழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.ஆசை வார்த்தை கூறி இளம்பெண்ணை கர்ப்பமாக்கிய டாக்டர்மதுரை திருமங்கலத்தைச் சேர்ந்த 30 வயது அழகு நிலைய பெண் உரிமையாளருக்கும், காரைக்குடி பகுதியைச் சேர்ந்த டாக்டர் மணிரத்தினத்திற்கும் சமூக வலைத்தளம் வழியாகப் பழக்கம் ஏற்பட்டது. திருமணம் செய்வதாக ஆசைவார்த்தை கூறி, டாக்டர் அப்பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்ததில் அவர் கர்ப்பமானார்.வழக்குப்பதிவுஇதையறிந்த டாக்டர் பெண்ணின் கர்ப்பத்தைக் கலைக்கக் கூறி மாத்திரைகள் வழங்கி கட்டாயப்படுத்தியுள்ளார். மேலும் திருமணத்திற்கு மறுத்த நிலையில் மணிரத்தினம் மீது, பாதிக்கப்பட்ட பெண் திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் அடிப்படையில் போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தென்காசி அருகே ரெயில்வே கேட் கம்பியில் ஆம்புலன்ஸ் சிக்கியதால் பரபரப்பு




தென்காசி, ஆக. 24

தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரத்தில் நோயாளியை அழைத்துச் சென்ற ஆம்புலன்ஸ் வாகனம் ஒன்று, ரெயில்வே கேட் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த உயர் தடுப்பு கம்பியில் சிக்கியது. மேலும் அது போக்குவரத்து நெரிசல் அதிகம் உள்ள பகுதி என்பதால், வாகனங்கள் செல்லமுடியாமல்சுமார்30நிமிடங்கள் அங்கு பெரும் பரபரப்பான சூழல் நிலவியது. உயர் தடுப்பு கம்பியில் ஆம்புலன்ஸ் வாகனத்தின் மேல் பகுதியில் இருந்த ஒலிபெருக்கி சிக்கிய நிலையில், ஊழியர்கள் அதைத் திருப்பி சரிசெய்து வாகனத்தை மீட்டனர். இதையடுத்து ஆம்புலன்ஸ் அங்கிருந்து கிளம்பிச் சென்றது. தொடர்ந்து போக்குவரத்துவழக்கம்போல்சீரானது. அந்த பகுதியில் மேம்பாலப் பணிகள் மந்தமான வேகத்தில் நடைபெறுவதே இது போன்ற சம்பவங்களுக்கு காரணம் என அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

# கோவை: ஏ.டி.எம்.மில் நிரப்ப கொடுத்த ரூ.10 லட்சம் மோசடி பெண் கைது






கோவை, ஆக. 24

கோவை குனியமுத்தூர் பி.கே.புதூர் பகுதியில் ஏ.டி.எம்.மில் நிரப்ப கொடுத்த ரூ.10 லட்சம் பணத்தை மோசடி செய்த பெண் கைது செய்யப்பட்டார். கோவை குனியமுத்தூர் பி.கே.புதூர் பகுதியில் ஏ.டி.எம். எந்திரங்களில்பணம்நிரப்பும் நிறுவனத்தில் ஊழியராக வேலை பார்த்து வந்த திருச்சி அம்பிகாபுரத்தை சேர்ந்த கதிர்வேல் பச்சைமுத்து (வயது 40) மற்றும் அவரது மனைவி ஐஸ்வர்யா ஆகியோர், எந்திரங்களில் நிரப்ப வேண்டிய ரூ.10 லட்சம் பணத்தை தங்களது சொந்த தேவைக்காக எடுத்து மோசடி செய்தனர். பணத்தை திருப்பி தராமல் தம்பதியினர் தலைமறைவாகினர். இதுகுறித்து நிறுவன உரிமையாளர் ரவிகுமார் அளித்த புகாரின் பேரில் குனியமுத்தூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து தற்போது ஐஸ்வர்யாவை கைது செய்தனர். தலைமறைவான கதிர்வேலை தேடி வருகின்றனர்.

# கொடுங்கையூர் குப்பைக் கிடங்கில் உயிரி அகழ்ந்தெடுத்தல் முறையில் 44 லட்சம் மெட்ரிக் டன் குப்பைகள் அகற்றம்



சென்னை, ஆக. 24

பெருநகர சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் தொடர்பாக அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் மாநகராட்சி ஆணையாளர் சமீரன், தலைமையில் ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் துணை ஆணையாளர் சித்ரா விஜயன், மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் மாநகராட்சி ஆணையாளர் பணிகளை ஆய்வு செய்து பேசும்போதுதெரிவித்ததாவது:திடக்கழிவுமேலாண்மைப் பணிதமிழ்நாடு முதல்அமைச்சர் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். பெருமளவு திடக்கழிவுகளை உருவாக்குபவர்கள் திடக்கழிவுகள் உருவாகும் இடத்திலேயே மக்கும் குப்பை, மக்காத குப்பை, சுகாதாரக் கழிவுகள், அபாயகரமானகழிவுகளைதனித்தனியேபிரித்து வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இப்பணிகளை கண்காணித்திட பொறுப்பு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இது குறித்து மக்களிடையே விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குப்பைகளுக்கான குப்பைத் தொட்டிகளையும் குப்பைகளை உருவாக்குபவர்களுடைய வளாகத்திற்குள் வைத்து, குப்பைகளை வழங்கிட வேண்டும். வருகின்ற செப்டம்பர் 1ம் தேதி முதல் பெருமளவு திடக்கழிவுகளை உருவாக்குபவர்கள் கட்டாயம் திடக்கழிவினைத் தரம் பிரித்து வழங்கிட வேண்டும் மீறுவோர்களுக்கு உரிய அபராதம் விதித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.விழிப்புணர்வுஅதைப்போல, குடியிருப்புகள் உள்ளிட்ட அனைத்து இடங்களிலிருந்தும் குப்பைகளைத் தரம் பிரித்து வழங்குவதற்கு உரிய விழிப்புணர்வுப் பணியினைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும், இன்று தெற்கு வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் மக்களிடையே குப்பைகளை தரம் பிரித்து வழங்குவது தொடர்பாக வீடுவீடாகச் சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, வடக்குமற்றும்மத்தியவட்டாரப்பகுதிகளிலும் வீடுவீடாகச் சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணி மேற்கொள்ளப்படும்.பெருங்குடி குப்பை கிடங்குகளில் குப்பைகளை முதற்கட்டமாக நடைபெற்ற உயிரி அகழ்ந்தெடுத்தல் முறையில் அகற்றிடும் பணி முடிக்கப்பட்டு 94 ஏக்கர் நிலம் மீட்டெடுக்கப்பட்டுள்ளது. தற்போது இரண்டாம் கட்டமாக 5.50 லட்சம் மெட்ரிக் டன் குப்பைகளை உயிரி அகழ்ந்தெடுத்தல் முறையில் அகற்றிடும் பணி மேற்கொள்ளப்பட்டு இதில் 28 ஆயிரம் மெட்ரிக் டன் குப்பைகள் அகற்றப்பட்டுள்ளது. தொடர்ந்து இப்பணிகளைவிரைந்து மேற்கொள்ள வேண்டும்.இதைப் போல கொடுங்கையூர் குப்பைக் கிடங்கில் 66 லட்சம் மெட்ரிக் டன் குப்பைகள் உயிரி அகழ்ந்தெடுத்தல் முறையில்அகற்றிடும்பணிமேற்கொள்ளப்பட்டுஇதுவரை 44இலட்சம்மெட்ரிக்டன்குப்பைகள்அகற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் 16 ஏக்கர் நிலம் மீட்டெடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, இப்பணிகளை கண்காணித்து விரைந்து முடித்திட வேண்டும்.அத்திப்பட்டு குப்பை கிடங்குகளில் குப்பைகளை முதற்கட்டமாக நடைபெற்ற உயிரி அகழ்ந்தெடுத்தல் முறையில் 1 லட்சம் கன மீட்டர் குப்பைகள் அகற்றப்பட்டது. தற்போது இரண்டாம் கட்டமாக 72 ஆயிரம் மெட்ரிக் டன் குப்பைகளை உயிரி அகழ்ந்தெடுத்தல் முறையில் அகற்றிடும் பணி மேற்கொள்ளப்பட்டு இதில் 36 ஆயிரம் மெட்ரிக் டன் குப்பைகள் அகற்றப்பட்டுள்ளது. தொடர்ந்து இப்பணிகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும். பெருநகரசென்னைமாநகராட்சிப்பகுதிகளில்நடைபெற்று வரும்திடக்கழிவு மேலாண்மைப்பணிகளைஅலுவலர்கள் கண்காணித்து மேலும் சிறப்பாக மேற்கொள்ள வேண்டும் என்று பேசினார்.

# கடலூர்: காதலனை கரம்பிடித்த திருநங்கை



கடலூர், ஆக. 24

கடலூர் பகுதியைச் சேர்ந்த திருநங்கை சஞ்சனா தனது காதலன் நாகராஜ் என்பவரை குடும்பத்தார் சம்மதத்துடன் திருமணம் செய்துகொண்டார்.கடலூர் மாவட்டம் திருவந்திபுரம் தேவநாத சுவாமி கோவிலில் ஆவணி மாத முகூர்த்தத்தை முன்னிட்டு ஒரே நாளில் 84 திருமணங்கள் நடைபெற்றன. இதில் நெகிழ்ச்சியான நிகழ்வாக, கடலூர் பகுதியைச் சேர்ந்த திருநங்கை சஞ்சனா தனது காதலன் நாகராஜ் என்பவரை குடும்பத்தார் சம்மதத்துடன் திருமணம் செய்துகொண்டார்.திருமணம் செய்துகொண்ட திருநங்கை சஞ்சனா நடனக் கலைஞராகவும், அவரது காதலன் நாகராஜ் பூசாரியாகவும் உள்ளனர்.

# அனுபவ நிலங்களுக்கு பட்டா கொடுக்காமல் இருந்த ஆட்சியாளர்கள் மீது என்ன நடவடிக்கை பெ. சண்முகம் கேள்வி



சென்னை, ஆக. 24

அனுபவ நிலங்களுக்குப் பட்டா தராமல் இருந்த ஆட்சியாளர்கள் மீது என்ன நடவடிக்கை?" என்று தவெக அரசுக்கு பெ. சண்முகம் கேள்வி எழுப்பியுள்ளார். இது தொடர்பாக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாலர் பெ. சண்முகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: தேனி மாவட்டம் மேகமலையில் 118 அரசு ஊழியர்களை அவர்களின் நிலங்களில் இருந்து உடனடியாக வெளியேற்ற வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டது. இதனை தொடர்ந்து தேனி மாவட்ட ஆட்சியர் நாளை வெளியேற்றும் நடவடிக்கையை மேற்கொள்ள உள்ளதாக தெரிகிறது. இப்போது அரசு ஊழியர்களாக உள்ளவர்களின் முப்பாட்டன், தாத்தா, அப்பாபயிர்செய்து வந்த நிலங்களை ஆக்கிரமிப்பு என்றும், எனவே அவர்களின் வாரிசுகளான இப்போது அரசு ஊழியர்களாக உள்ளவர்கள் எல்லாம் ஆக்கிரமிப்பாளர்கள் என்றும் வகைப்படுத்தி வெளியேற்ற உத்தரவு வழங்கி உள்ளது சுப்ரீம் கோர்ட்டு. இல்லை என்றால்ஊழியர்கள்மீதுசம்பந்தப்பட்டதுறைநடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளது. இது நீதியா? நியாயமா? இதே அணுகுமுறையை நாடு முழுவதும் கடைப்பிடித்தால் பல்லாயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் தங்கள் பணியை இழக்க வேண்டும் அல்லது நிலத்தை இழக்க வேண்டும். பட்டா இல்லாதவர்கள் எல்லாம் ஆக்கிரமிப்பாளர்கள் என்றால் நூறாண்டுகளாக பயிர் செய்தும், குடியிருந்து வரும் மக்களுக்கு பட்டா கொடுக்காததற்கு யார் பொறுப்பு ஏற்பது? அனுபவ நிலங்களுக்குபட்டாகொடுக்காமல்இருந்தஆட்சியாளர்கள் மீது என்ன நடவடிக்கை! வன உரிமைச்சட்டம் 2006, 20 ஆண்டுகளாகஅமலில்இருந்தும்சட்டத்தைஅமல்படுத்தாத அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை? சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள்"ஆக்கிரமிப்புகண்ணாடியை"அணிந்துகொண்டு பார்த்தால் ஆக்கிரமிப்பாகத் தான் தெரியும். மக்களின் வாழ்வாதாரம் என்ற "மனிதாபிமான கண்ணாடியை" அணிந்து கொண்டு பார்த்தால்தான் நீதி தெரியும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# திண்டுக்கல்-கரூர் வழித்தடத்தில் 9 மணி நேரம் ரெயில் சேவை நிறுத்தம்



திண்டுக்கல், ஆக 24

தண்டவாள புதுப்பிப்பு பணி காரணமாக திண்டுக்கல்கரூர் வழித்தடத்தில்9மணிநேரம்ரெயில்சேவைநிறுத்தப்பட்டது. தண்டவாளம் புதுப்பிப்புதிண்டுக்கல் ரெயில் நிலையத்தில் இருந்து கரூர், சேலம் வழித்தடத்தில் செல்லும் ரெயில்கள் பாலகிருஷ்ணாபுரம் பகுதியில் உள்ள ரெயில் பாதை வழியாக சென்று வருகின்றன. இந்த நிலையில் திண்டுக்கல் ரெயில்நிலையத்தில்இருந்துகரூர்செல்லும்வழித்தடத்தில் இரண்டரை கிலோ மீட்டர் தூரம் வரை அமைக்கப்பட்ட தண்டவாளத்தை புதுப்பிக்க ரெயில்வே நிர்வாகம் முடிவு செய்தது.அதன்படி அந்த வழித்தடத்தில் ஏற்கனவே பதிக்கப்பட்ட 54 கே.ஜி. எடை கொண்ட தண்டவாளத்தை அகற்றிவிட்டு 60 கே.ஜி. தண்டவாளத்தை பதிக்கும் பணி நேற்று காலை 9 மணிக்கு தொடங்கியது. இதற்காக பொக்லைன் எந்திரங்கள், தண்டவாளத்துடன் இணைக்கப்பட்ட சிமெண்டு சிலிப்பர் கட்டைகளுடன் அவற்றைபெயர்த்துஎடுக்கும்பிரத்யேகஎந்திரம்ஆகியவை கொண்டுவரப்பட்டன. பின்னர் அந்த கருவிகள் மூலம் பழைய தண்டவாளம் அகற்றப்பட்டது.ரெயில்வே சேவை மாற்றம்இதையொட்டி திண்டுக்கல்கரூர் வழித்தடத்தில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை 9 மணி நேரம் ரெயில் சேவை நிறுத்தப்பட்டது. மேலும் அந்த வழித்தடத்தில் செங்கோட்டை-ஈரோடு எக்ஸ்பிரஸ் ரெயில் மட்டுமே பகலில் செல்கிறது. அந்த நேரத்தில் மட்டும் பராமரிப்பு பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு பின்னர் மீண்டும் தொடங்கப்பட்டது. நாகர்கோவில்கோவை எக்ஸ்பிரஸ் ரெயில் விருதுநகரில் இருந்து வழித்தடம் மாற்றப்பட்டு அருப்புக்கோட்டை, மானாமதுரை, சிவகங்கை, காரைக் குடி, திருச்சி வழியாக கரூருக்கு சென்று, அங்கிருந்து கோவை சென்றது.இதற்கிடையே சிமெண்டு சிலிப்பர் கட்டைகளுடன் கூடிய 60 கே.ஜி. எடை கொண்ட புதிய தண்டவாளம் பிரத்யேக எந்திரம் மூலம் பதிக்கப்பட்டு பணிகள் நிறைவு செய்யப்பட்டது. இதன்மூலம்தண்டவாளத்தின்உறுதிதன்மைஅதிகரிக்கும், அதிக எடையிலான பொருட்களை சரக்கு ரெயில் மூலம் அந்த வழித்தடத்தில் கொண்டு செல்ல முடியும். பயணிகள் ரெயிலின் வேகத்தையும் அதிகரிக்க முடியும் என்று ரெயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

# கோவளம் மாநாட்டில் முதல்அமைச்சர் விஜய் பேசியது குறித்து சட்டமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்காதது ஏன்? கிருஷ்ணசாமி கேள்வி



சென்னை, ஆக. 24

கோவளம் மாநாட்டில் முதல்அமைச்சர் விஜய் பேசியது குறித்து சட்டமன்றத்தில் விளக்க அறிக்கை சமர்ப்பிக்காதது ஏன்? என புதிய தமிழகம் கட்சி நிறுவனரும், தலைவருமான டாக்டர் கிருஷ்ணசாமி கேள்வி எழுப்பி உள்ளார்.ஆக்கபூர்வமான பதில்இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:துறை ரீதியான நிதிநிலை அறிக்கைகள் மற்றும் அன்றாடம் எழும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்து எதிர்க்கட்சிகள் எழுப்பும் வினாக்களுக்கு, ஆக்கபூர்வமாகப் பதிலளிக்க வேண்டிய அமைச்சர்களின் அர்த்தமற்ற, திசைதிருப்பும்பதில்கள் 'பட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் கொட்டைப்பாக்கு விலை என்ன?' என்று கேட்பது போல உள்ளன.இருதலைக்கொள்ளி எறும்புநேரலை ஒளிபரப்பில் அவர்களின் இத்தகைய வீராவேசப் பதில்கள் சமூக ஊடக Contentகளுக்கு பயன்படுமே தவிர, மக்களுக்குக் கிஞ்சித்தும் பயன் தராது. ஏதாவது ஒரு கட்டத்தில் சட்டமன்ற நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த வேண்டிய நிலையில் உள்ள பேரவைத் தலைவர், இருதலைக்கொள்ளி எறும்பைப் போல் நியாயத்திற்கும் அநியாயத்திற்கும் இடையே சிக்கித் தவிக்கிறார்.அமைச்சர்களின் அடாவடியான, அருவருக்கத்தக்க பேச்சுக்கள் லட்சக்கணக்கான மக்களிடையே நேரலையில் சென்றடைந்த பிறகு, அதைக் குறிப்பிலிருந்து நீக்குவது "குதிரை ஓடிய பிறகு லாயத்தைப் பூட்டுவதற்குச்சமம்".இதனால்யாருக்குஎன்னபலன்?முதல் மந்திரிகள் மாநாடுகாவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சனை தீவிரமடைந்துள்ள சூழலில், தமிழகத்திலிருந்து எதிர்ப்புகள் எழும் என்று எண்ணி, எவ்வித முன் அறிவிப்புமின்றி, தமிழகத்திலுள்ள கோவளம் பகுதியில், உள்துறை மந்திரி அமித்ஷா தலைமையில் தென்னிந்திய முதல்மந்திரிகள்மாநாடுநடைபெற்றது. இதில் மேகதாது பிரச்சனை, காவிரி நதிநீர்ப் பங்கீடு, பெரியாறு அணைக்கட்டு உயரத்தை 152 அடியாக உயர்த்துவது, ஆந்திராவுடனான பாலாறு குறித்த பிரச்சனைகள்

குறித்து தமிழக முதல்அமைச்சர் பேசியது என்ன? என்பது குறித்து தமிழகச் சட்டமன்றத்திற்கு அறிக்கையாகச் சமர்ப்பித்திருக்க வேண்டுமே, ஏன் முதல்அமைச்சர் விஜய் அவர்கள் அதைச் செய்யவில்லை? இது குறித்து எதிர்கட்சியினர் எவரும் வினா எழுப்பவில்லையே ஏன்?Reels content'பட்டுக்கோட்டைக்கு' வழி கேட்டால் 'கொட்டைப்பாக்கின்' விலை என்ன? என்பதற்கேற்ப அமையும் தமிழக அமைச்சர்களின் பதில்கள்!"Reels content" மீடியா வெளிச்சத்தை குறிவைத்து பேசும் தமிழக அமைச்சர்கள்!கோவளம் மாநாட்டில் முதல்அமைச்சர் விஜய் அவர்கள் பேசியது குறித்து சட்டமன்றத்தில் விளக்க அறிக்கை சமர்ப்பிக்காதது ஏன்?தமிழக சட்டமன்ற நிகழ்வுகள் திசைமாறிப் போகிறதா?இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போதையில் லாரி மோதி விபத்து..! தர்ம அடிக்கு பயந்து குளத்தில் குதித்து தப்பியோடிய டிரைவர்



திங்கள்சந்தை, ஆக .24

கார் மீது டாரஸ் லாரியை மோதி விபத்து ஏற்படுத்திய டிரைவர், பொதுமக்களின் தர்ம அடிக்கு பயந்து குளத்தில் குதித்து தப்பி ஓடிய சம்பவம் நிகழ்ந்துள்ளது. போக்குவரத்து நெரிசல்குமரி மாவட்டத்தில் நாகர்கோவில் களியக்காவிளை 4 வழிச்சாலை பணிகள் துரிதமாக நடந்து வருகின்றன. இதன் ஒரு பகுதியாக சுங்கான்கடை அருகே தோட்டியோட்டில் மேம்பாலம் அமைக்கும் பணிகள் நடக்கிறது. இதனால் அந்த பகுதியில் அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. குளச்சல் போக்குவரத்து போலீசார் தினமும் போக்குவரத்தை ஒழுங்குப்படுத்தி வருகின்றனர்.கார் டாரஸ் லாரி மோதல்இந்தநிலையில் நேற்று முன்தினம் ஒரு டாரஸ் லாரி தக்கலையில் இருந்து நாகர்கோவில் நோக்கி சென்று கொண்டிருந்தது. அந்த லாரி தோட்டியோட்டில் மேம்பால பணிகள் நடைபெறும் இடத்தில் வந்த போது எதிரே ஒரு சொகுசு கார் வந்தது. எதிர்பாராத விதமாக டாரஸ் லாரியும், சொகுசு காரும் நேருக்கு நேர் மோதின. இந்த விபத்தில் காரின் ஒரு பகுதி முழுவதும் பலத்த சேதம் அடைந்தது.பொதுமக்கள் சத்தம்விபத்து நடந்ததும் அந்த வழியாக வந்தவர்கள் அங்கு திரண்டு காரில் இருந்தவர்களை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர். காரில் இருந்தவர்கள் அதிர்ஷ்டவசமாக காயமின்றி உயிர் தப்பினர். ஆனாலும் ஆவேசம் அடைந்த பொதுமக்கள் டாரஸ் லாரி டிரைவரிடம் கீழே இறங்குமாறு சத்தமிட்டனர்.குளத்தில் குதித்து தப்பியோட்டம்பொதுமக்களின் ஆவேச குரலை கேட்டு லாரி டிரைவர் மிகவும் அச்சமடைந்தார். பொதுமக்களின் கையில் சிக்கினால் தர்ம அடி கிடைக்கும் என பயந்து போன டிரைவர் லாரியின் ஜன்னல் வழியாக வெளியே வந்தார். தொடர்ந்து லாரியின் பின்பக்கம் வழியாக வேகமாக சென்று சாலையோரம் இருந்த குளத்தில் குதித்தார். இதைபார்த்த பொதுமக்கள், 'அவரை பிடியுங்கள்... பிடியுங்கள்...' என கூச்சலிட்டனர்.இதை கேட்டு மேலும் அச்சமடைந்த டிரைவர் தண்ணீரில் வேகமாக நீந்தி குளத்தின் மறுகரைக்கு சென்று புதர்கள் இடையே கரையேறினார். தொடர்ந்து அருகில் இருந்த தென்னந்தோப்பு வழியாக ஓட்டமும் நடையுமாக தப்பி செல்ல முயன்றார்.சமூக வலைத்தளங்களில் வைரல்இதற்கிடையே அங்கு போக்குவரத்தை ஒழுங்குபடுத்தி கொண்டிருந்த குளச்சல் போக்குவரத்து போலீசார் விரைந்து சென்று லாரி டிரைவரை மடக்கி பிடித்தனர். அப்போதுஅவர் மது போதையில் லாரியை ஓட்டி வந்ததாக கூறப்படுகிறது.இந்தநிலையில் விபத்தில் சிக்கிய வாகனங்கள் சாலையில் நின்றதால் அந்த பகுதியில் கடும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது. இதையடுத்து போலீசார், லாரி மற்றும் சொகுசு காரை அப்புறப்படுத்தி போக்குவரத்தை ஒழுங்குபடுத்தினர்.இதற்கிடையே லாரி டிரைவர் ஜன்னல் வழியாக வெளியேறி குளத்தில் குதித்து தப்பி செல்வதை அங்கு நின்ற சிலர் செல்போனில் படம் பிடித்தனர். இந்த வீடியோ தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது.

# ஈஷா கிராமோத்சவம் மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகள்: எம்.எல்.ஏ. கனிமொழி தொடங்கி வைத்தார்



கோவை, ஆக. 24

தமிழ்நாட்டில் கோவை, சேலம், வேலூர், கடலூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய 6 இடங்களில் இன்று மண்டல அளவிலான போட்டிகள் நடைபெற்றன.இதில் கோவையில் நடைபெற்ற போட்டிகளை கவுண்டம்பாளையம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கனிமொழி சந்தோஷ் மற்றும் கொங்குநாடு கல்லூரியின் செயலாளர் வாசுகி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு தொடங்கி வைத்தனர்.ஈஷா கிராமோத்சவம்இதில் முதற்கட்ட கிளஸ்டர் போட்டிகளில் வெற்றி பெற்ற ஆயிரக் கணக்கான கிராமப்புற விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்றனர். கனிமொழி சந்தோஷ் பேசுகையில், "சமூகத்தில்பலரும்பல்வேறுசங்கங்களையும் இயக்கங்களையும் தொடங்குகிறார்கள். ஆனால், அவற்றைத் தொய்வின்றித் தொடர்ந்து நடத்துவது இல்லை. ஒரு நிகழ்வைத் தொடர்ந்து நடத்துவது என்பது மிகப்பெரிய மற்றும் கடினமான செயலாகும்.ஆனால், ஈஷாவிடம் நான் கண்ட ஒரு முக்கியச் சிறப்பு அவர்களின் ஒருங்கிணைப்புத் திறன் மற்றும் அர்ப்பணிப்பு ஆகும். 18 ஆண்டுகளாக இளைஞர்களுக்காகவும் மக்களுக்காகவும் ஒரு சமூக நோக்கத்தோடு ஈஷா கிராமோத்சவத்தை தொடர்ந்து நடத்துவது என்பது மிகப்பெரிய செயலாகும்.நமது முதல் அமைச்சர், விளையாட்டுத்துறை அமைச்சர் விளையாட்டிற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகின்றனர். ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று, அங்குள்ள இளைஞர்களின் திறமைகளைக் கண்டறிந்து, அவர்களை வெளிக்கொண்டு வருவதில் நமது முதல் அமைச்சர் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறார். தற்போதைய காலகட்டத்தில், தொழில்நுட்பம் எந்த அளவிற்கு வளர்கிறதோ, அந்த அளவிற்கு நமது உடல்நலனும் குறைந்துகொண்டே வருகிறது.இன்றைய சூழலில், குழந்தைகள்காலை முதல் இரவு வரைஅலைபேசியிலேயே மூழ்கிக் கிடக்கின்றனர். மது மற்றும் புகைப்பழக்கத்தை விட, அலைபேசியின் அதீதப் பயன்பாடு குழந்தைகளின் சிந்தனைத் திறனைக் கடுமையாகப் பாதிக்கக்கூடியது. எனவே, குழந்தைகளுக்கு அலைபேசியை அளவோடு பயன்படுத்தக் கற்றுக் கொடுக்க வேண்டும்.பெற்றோர்கள் இருவரும் வேலைக்குச் செல்லும் தற்போதைய சூழலில், குழந்தைகளின் கவனத்தைத் சரியான திசையில் செலுத்த ஈஷா நடத்தும் இதுபோன்ற விளையாட்டு நிகழ்வுகள் பெரிதும் உதவுகின்றன. விளையாட்டை ஊக்குவிப்பது என்பது உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு மட்டுமல்லாமல், மனத்தெளிவையும், எதிர்கால இலக்குகளை நோக்கிய கவனத்தையும் குழந்தைகளுக்கு வழங்குகிறது.விளையாட்டுத்துறை அமைச்சர் சட்டமன்றத்தில் கூறியது போல் உங்களின் வேலைப்பளு எவ்வளவு இருந்தாலும், தினமும் குறைந்தது ஒரு மணி நேரமாவது விளையாட்டிற்காக நேரம் ஒதுக்க வேண்டும். எனக் கூறினார். இதில் வெற்றி பெற்ற வாலிபால் மற்றும் த்ரோபால்அணிகளுக்குரொக்கப்பரிசுகள்வழங்கப்பட்டன. குறிப்பாகத்ரோபால்போட்டிகளில்சிறப்பாகவிளையாடிய ஒருவீராங்கனைக்கு எலெக்ட்ரிக் இருசக்கரவாகனம்பரிசாக வழங்கப்பட்டது. போட்டிகள் நடைபெற்ற 6 மண்டலங்களிலும் ஒரு சிறந்த த்ரோபால் வீராங்கனைக்கு எலெக்ட்ரிக் இருசக்கர வாகனம் பரிசாக வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. கிராமப்புற மக்களின்அன்றாட வாழ்வில் விளையாட்டை ஒரு அங்கமாக மாற்றி, அவர்களின் நல்வாழ்வை மேம்படுத்தும் நோக்கில் சத்குருவின் வழிகாட்டுதலில் 'ஈஷா கிராமோத்சவம்' விளையாட்டுத் திருவிழா ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது. இறுதிப்போட்டிகிராமோத்சவ விளையாட்டுத் திருவிழா கிளஸ்டர், டிவிஷனல் மற்றும் இறுதிப் போட்டிகள் ஆகிய நிலைகளில் நடைபெறுகிறது. தமிழ்நாடு மற்றும் புதுவையில் கிளஸ்டர் அளவிலான முதற்கட்ட போட்டிகள் 70க்கும் மேற்பட்ட இடங்களில் இம்மாத முதல் 2 வாரங்களில்நடைபெற்றது.தற்போது மண்டலஅளவிலான போட்டிகள் நடைபெற்றுள்ளன. இதனைத் தொடர்ந்து பிரம்மாண்ட

இறுதிப்போட்டி செப்டம்பர் 6 அன்று கோவை ஆதியோகி வளாகத்தில் சத்குருவின் முன்னிலையில் நடைபெறும். பரிசுத்தொகைஈஷா கிராமோத்சவம் 2026இன் இறுதிப் போட்டியில் வெல்லும் கைப்பந்து மற்றும் எறிபந்து அணிகளுக்கு தலா ரூ.5 லட்சமும், இரண்டாம் இடத்திற்கு ரூ.3 லட்சமும் பரிசாக வழங்கப்படும். மூன்று மற்றும் நான்காம் இடங்களைப் பிடிக்கும் அணிகளுக்கு முறையே ரூ.1 லட்சமும், ரூ.50,000மும் வழங்கப்படும். மாற்றுத்திறனாளிகளுக்கான போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றிபெறும்அணிகளுக்குசிறப்புபரிசுகள்வழங்கப்படும். இந்த விளையாட்டுத் திருவிழாவில், கிராமப்புற இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் மொத்தம் ரூ.1 கோடிக்கும் மேல் பரிசுத்தொகை வழங்கப்படுகிறது.வட மாநிலங்களுக்கும் விரிவாக்கம்ஈஷா கிராமோத்சவம் இந்தாண்டு புதிதாக உத்தரப் பிரதேசம், ஹரியானா, இமாச்சலப் பிரதேசம், ஒடிசா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய வட மாநிலங்களுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதனுடன் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, தெலங்கானா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் புதுச்சேரி இணைந்து மொத்தம் 10மாநிலங்கள்மற்றும்1யூனியன்பிரதேசத்தில்போட்டிகள் நடைபெறுகின்றன.இந்த மாபெரும் விளையாட்டுத் திருவிழாவில், சுமார் 7,005 அணிகள் மூலம் 40,000க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து கிட்டத்தட்ட 20,000 பெண்கள் உட்பட 80,352 கிராமப்புற மக்கள் பங்கேற்றுள்ளனர்.

# ஊழல், கட்சி நிதி என்று கூறினாலே எதிர்க்கட்சியினருக்கு கோபம் வருகிறது அமைச்சர் நிர்மல் குமார்



மதுரை, ஆக. 24

ஊழல், கட்சி நிதி என்று கூறினாலே எதிர்க்கட்சியினருக்கு கோபம் வருகிறது என அமைச்சர் நிர்மல்குமார் கூறியுள்ளார். மதுரையில் தவெக பொதுக் கூட்டத்தில் அமைச்சர் நிர்மல் குமார் பேசியதாவது:நடந்து முடிந்த தேர்தலில் திமுகவை மக்களே பழிவாங்கி விட்டனர். அவர்களைநாங்கள்ஏன்தனியாக பழிவாங்க வேண்டும்?இத்தனை ஆண்டுகளில் நீங்கள் என்னென்ன கொள்ளை அடித்தீர்கள்? என்னென்ன செய்தீர்கள்? என்பதைப் பார்த்த மக்களே, உங்களைத் தூக்கி வெளியில் போட்டு விட்டார்கள்.முன்னாள் முதல்அமைச்சர்கள் எம்ஜிஆரும், ஜெயலலிதாவும்தீயசக்திதிமுகவைஒழித்துக் கட்ட வேண்டும் என்று கூறினர். அதற்காகத்தான் அந்தக் கட்சியையே (அதிமுக) தொடங்கினர். ஆனால், தற்போது திமுகவை விஜய் ஒழித்துக் கட்டி விட்டார். இனிமேல், அறிவாலயத்தை வெள்ளையடித்து, வாடகைக்குத்தான் விட வேண்டும். முரசொலி அறக்கட்டளைக்குத்தான் அவர்களுக்கு இவ்வளவு போட்டி. அதில்தான் சொத்துகள் அனைத்தும் உள்ளன. அந்த அறக்கட்டளையை யார் எந்த குடும்பம் கைப்பற்றுகிறது? என்பதுதான் போட்டி.இன்னும் 2 ஆண்டுகளில்அறக்கட்டளையைக் கைப்பற்றிவிட்டு, அறிவாலயத்தை வாடகைக்கு விட்டுவிட்டு, வேறு வேலையைப் பார்க்கச் சென்று விடுவர். இது (தவெக) மக்களுக்கான அரசு. ஒவ்வோர் ஆண்டும் உங்களுக்குத் தேவையானஅனைத்தும்கிடைக்கும்.வரும்5ஆண்டுகளில் நிச்சயமாக ஒரு பெரிய மாற்றத்தைக் கொண்டு வருவோம். எதிர்க்கட்சியினருக்கு ஊழல், கட்சி நிதி என்று கூறினாலே கோபம் வருகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

# மானாமதுரை: காதல் விவகாரத்தால் சட்டக்கல்லூரி மாணவர் வெட்டிக்கொலை பெண்ணின் தந்தை, தம்பி கைது

சிவகங்கை, ஆக. 24



மானாமதுரை அருகே சட்டக்கல்லூரி மாணவனை காதல் விவகாரத்தால்பெண்ணின்தந்தைமற்றும்தம்பிகொடூரமாக வெட்டிக்கொலை செய்துள்ளனர்.வெட்டி கொலைசெய்கக்க மாவட்டம் மானாமதுரை சின்ன புதுக்கோட்டை பகுதியை சேர்ந்த சிவபாலன்(வயது 35) மானாமதுரை சட்டக்கல்லூரியில் 2ம் ஆண்டு படித்து வருகிறார். இவர் அதே பகுதியை சேர்ந்த தனது உறவினர் முருகேசன் (வயது 50) என்பவரின் மகளை காதலித்து வந்தார்.ஒரேஊரின்தால்பெண்ணின்குடும்பத்தினருக்கு காதல் விவகாரம் தெரியவந்து, இவர்களது காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனால் இருவரும் காதலை கைவிடவில்லை. மேலும் பெண்ணின் தம்பி அருண்ராஜா(19) இவர்கள் காதலுக்கு எதிராக இருந்து வந்தார்.இதனால் ஆத்திரமடைந்த சிவபாலன் பெண்ணின் தம்பியை கொலை செய்வதற்காக சென்றுள்ளார். இதனை அறிந்த பெண்ணின் தந்தை மற்றும் உறவினர்கள் சிவபாலனை வழிமறித்து கத்தி மற்றும் அரிவாளால் சரமாரியாக வெட்டியுள்ளனர். இதனால் பலத்த காயமடைந்த சிவபாலன் ரத்த வெள்ளத்தில் மிதந்து பரிதாபமாக உயிரிழந்தார்.போலீசார் விசாரணையிது குறித்து சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். இந்த கொலையில் ஈடுபட்ட பெண்ணின் தந்தை மற்றும் தம்பியை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். முதற்கட்ட விசாரணையில் கொலை செய்யப்பட்ட சிவபாலன்மீது பல்வேறு குற்றவழக்குகள்இருப்பதாகவும் போலீசார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# வெள்ளத்தில் மூழ்கிய நெற்பயிர்கள்: த.வெ.க. அரசு உடனடியாக இழப்பீடு வழங்க வேண்டும் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தல்

சென்னை, ஆக. 24



அறுவடைக்குத் தயாராக இருந்த நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உடனடியாக இழப்பீடு வழங்க த.வெ.க. கூட்டணி அரசை வலியுறுத்தல். இது தொடர்பாக, அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: கன மழைகடந்த இரண்டு நாட்களாக திருவாரூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் பெய்த திடீர் மழையினால் சுமார் 2000 ஏக்கர் நிலத்தில் விளைவித்த நெற்பயிர்கள் மழை நீரில் மூழ்கி சேதமடைந்துள்ளதாக செய்திகள் வந்துள்ளன. விவசாயத்திற்கு ஆதாரம் தண்ணீர். தண்ணீருக்கு மழைதான் ஆதாரம்! கடந்த இரண்டு நாட்களாக டெல்டா மாவட்டங்களில் சில இடங்களில் பெய்த கன மழை, சுமார் 2000 ஏக்கரில் குறுவை சாகுபடி செய்த விவசாயிகளின் வாழ்வை அடியோடு புரட்டிப்போட்டுள்ளது.விவசாயிகள் கண்ணீர்கன மழையால் அறுவடைக்குத் தயாரான நெற்கதிர்கள் எதிர்பாராதமழையால்சேதமடைந்ததைஎண்ணிஅப்பகுதி விவசாயிகள் கண்ணீர் வடிக்கிறார்கள். இவர்களின் கண்ணீரைத் துடைப்பது த.வெ.க. கூட்டணி அரசின் கடமையாகும்.

அடுத்த ஜென்மத்தில் விவசாயியாக பிறக்க கனவு காணும் பொய்க்கால் அரசின் முதல்அமைச்சர் ஜோசப் விஜய், இந்த ஜென்மத்தில் அல்லலுறும் விவசாயிகளை காக்கும் நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும். வேதனையில் விவசாயிகள்இந்த அரசு ஜூன் 12ல், குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடாத நிலையில், நிலத்தடி நீரை நம்பி கடன் வாங்கி வேளாண் பயிர் செய்திருந்த விவசாயிகள், தற்போது கதிர்கள் முற்றி அறுவடைக்குத் தயாராக இருக்கும் நேரத்தில் கடந்த இரண்டு நாட்களாக பெய்த திடீர் மழையினால், பாடுபட்டு விளைவித்திருந்த நெற்கதிர்கள் மழையில் மூழ்கி நிலையை பார்த்து விவசாயிகள் கடும் வேதனையில் உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.தேர்தல் வாக்குறுதிஏன்கெனவே, த.வெ.க. தேர்தல் நேரத்தில் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் வாங்கிய வேளாண் கடன் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும் என்று தேர்தல் வாக்குறுதி அளித்துவிட்டு, ஆட்சிக்கு வந்த பிறகு, தவணை முறையில் சிறிது, சிறிதாக வேளாண் கடனை தள்ளுபடி செய்யும் அறிவிப்புகளை வெளியிடும் த.வெ.க. அரசின் முதல்அமைச்சரின் செய்கைகளை கண்டு விவசாயிகள் கொதித்துப்போய் உள்ளனர்.30,000 ரூபாய் நஷ்டஈடுதற்போது பெய்த கன மழையால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு கை கொடுக்க இந்த அரசு முன்வர வேண்டும். தமிழக அரசின் வருவாய்த் துறை மற்றும் வேளாண் துறை அதிகாரிகளை உடனடியாக மழையால் பாதிக்கப்பட்ட திருவாரூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களுக்கு அனுப்பி, பயிர் சேதவிவரங்களைமுழுமையாககணக்கெடுக்கவேண்டும். பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் அனைவருக்கும் ஏக்கர் ஒன்றுக்கு 30,000 ரூபாய் நஷ்ட ஈடாக வழங்க வேண்டும் என்று பொய்க்கால் த.வெ.க. அரசை வலியுறுத்துகிறேன்! இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# ‘அமைச்சர்களுக்கு அவை மரபும், சட்டமும் தெரியவில்லை’ துரைமுருகன் விமர்சனம்

சென்னை, ஆக. 24



த.வெ.க. அமைச்சர்களுக்கு அவை மரபும் தெரியவில்லை, சட்டமும் தெரியவில்லை என தி.மு.க. பொதுச்செயலாளரும், முன்னாள் அமைச்சருமான துரைமுருகன் விமர்சித்துள்ளார். இது தொடர்பாக செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது;“சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் நீண்ட நாள் சட்டசபையில் இருந்த அனுபவம் உள்ளவர். அவர் தற்போது சட்டசபையை நடத்துகின்ற விதத்தைப் பாக்கும்போது, ஓரளவு நல்ல முறையில்தான் அவையை நடத்துகிறார். அதை மறுக்க முடியாது. ஆனால் சட்டசபையில் நடக்கும் கூத்துகளை அவர்தான் தடுக்க வேண்டும்.த.வெ.க. அமைச்சர்களுக்கு அவை மரபும் தெரியவில்லை, சட்டமும் தெரியவில்லை. சட்டசபைக்குள் முதல் முறையாக செல்லும் எம்.எல்.ஏ.க்களுக்கு, அவையின் விதிமுறைகள் பற்றிய புத்தகத்தைக் கொடுப்பார்கள். அதை தற்போது உள்ள எம்.எல்.ஏ.க்களுக்கு கொடுத்தார்களா என்பது தெரியவில்லை. அதை அவர்கள் வாங்கிப் படிக்க வேண்டும்.”இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# சட்டமன்ற கூட்டத்தொடருக்கு உறுப்பினர்கள் ரெயிலிலேதான் வந்து சென்றோம் முன்னாள் எம்.எல்.ஏ. பாலபாரதி

சென்னை, ஆக. 24



தமிழகத்தில் எம்.எல்.ஏ.க்களின் தொகுதிப் பணிகளைச் சிறப்பாக மேற்கொள்ள கார், ஓட்டுநர் உதவியாளர் மற்றும் மாதம் ரூ.75,000 பராமரிப்புத் தொகை வழங்கப்படும் என முதல்அமைச்சர் விஜய் சமீபத்தில் சட்டபேரவையில் அறிவித்திருந்தார். இந்த அறிவிப்புக்கு சமூக ஆர்வலர்கள் மற்றும் பல்வேறு தரப்பிலிருந்தும் கடும் எதிர்ப்புகள் கிளம்பின.கோரிக்கைநிதிச்சுமையைக்கருத்தில் கொண்டு, பொருளாதாரத்தில் நலிவடைந்த எம்.எல்.ஏ.க்களுக்கு மட்டுமே இந்தச் சலுகையை வழங்க வேண்டும் எனப் பலரும்கோரிக்கைவிடுத்தனர்.பாலபாரதிஇந்தநிலையில், அப்போது(2001 முதல் 2016)சட்டமன்றகூட்டத்தொடரை முன்னிட்டு உறுப்பினர்கள் ரெயிலிலேதான் வந்து சென்றோம் என்று முன்னாள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி சட்டமன்ற உறுப்பினர் பாலபாரதி தெரிவித்தார். இது தொடர்பாக, அவர் தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது: பாண்டியன் எக்ஸ்பிரஸ்அநேகமாக, பாண்டியன் எக்ஸ்பிரஸில்தான் தென்மாவட்ட எம்எல்ஏக்கள் நிறைந்திருப்பார்கள். இரண்டாம் வகுப்பு எஸ் 3, எஸ் 4 பெட்டிகளில் அவர்கள் பயணம் செய்வார்கள். அதிகாலையில் அரசுப் பேருந்துகள்எம்எல்ஏக்களுக்காகசென்ட்ரல் மற்றும் எக்மோர் ரயில் நிலையங்களில் நிறுத்தப்பட்டிருக்கும். இரண்டு அல்லது மூன்று பேருந்துகளில் எம்எல்ஏக்கள், அவர்களின் உதவியாளர்கள்அல்லது உறவினர்கள்ஏறிக்கொள்வார்கள். தலைமை செயலக கோட்டைக்குள்ளும் பேருந்தில்தான் செல்வோம்.காரணம் சிம்பிள்ஆளும்கட்சி எதிர்க்கட்சி பாகுபாடில்லாமல் அந்த பேருந்து கலகலப்பாகவே பயணிக்கும். அதன்பிறகு இன்றுவரை ரெயில் நிலையங்களில் எம்எல்ஏக்களை காணமுடியவில்லை... காரணம் சிம்பிள்.அதாவது எளிமை.ரெயில் விமானமாக பரிணாம வளர்ச்சியை அடைந்திருந்தது.இவ்வாறு அதில் கூறினார்.

# விக்கிரவாண்டி சுங்கச்சாவடியில் 1ந்தேதி முதல் கட்டண உயர்வு

விழுப்புரம், ஆக. 24




விழுப்புரம் அருகே சென்னைதிருச்சி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள விக்கிரவாண்டி சுங்கச்சாவடியில் வருகிற1ந்தேதிமுதல்சுங்ககட்டணம்உயர்த்ததப்படுகிறது. இந்த சுங்கச்சாவடியில் ஆண்டுதோறும் நகாய் உத் தரவின் பேரில் புதிய கட்டண உயர்வு அமல்படுத்தப்படுவது வழக்கம். அந்த வகையில் இந்த ஆண்டு புதியதாக அறிவிக்கப்பட்ட சுங்கவரி கட்ட ணம் விவரம் பின்வருமாறு:கார், ஜீப், பயணிகள் வேன் உள்ளிட்ட வாகனங்கள் ஒரு வழி கட்டண மாக ரூ.105லிருந்து ரூ.110 ஆகவும், பல முறை பயணிக்க ரூ.160லிருந்து ரூ.165 ஆகவும், மாதாந்திர கட்டணம் ரூ.3,170லிருந்து ரூ.3300 ஆகவும் உயர்த்தியுள்ளது. இதேபோல் இலகு ரக வாகனத்திற்கு ஒரு வழி கட்டணம் ரூ.185லிருந்து ரூ.190 ஆகவும், பல முறை பயணிக்க ரூ.275லிருந்து ரூ.290 ஆகவும், மாதாந்திர கட்டணம் ரூ.5,545லிருந்து ரூ.5 ஆயிரத்து770ஆகவும்,டிரக்,பஸ்உள்ளிட்டவாகனங்களுக்கு ஒரு வழி கட்டணமாக ரூ.370லிருந்து ரூ.385 ஆகவும், பல முறை பயணிக்க ரூ.555லிருந்து ரூ.575 ஆகவும், மாதாந்திர கட்டணமாக ரூ.11,085லிருந்து, ரூ.11.545 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.பள்ளி பஸ்களுக்கு மாற்றம் இல்லைபல அச்சுகள் மற்றும் இரு அச்சுகளுக்கு மேல் உள்ளவாகனங்களுக்குஒருவழிகட்டணமாகரூ.595லிருந்து ரூ.620 ஆகவும், பல முறை பய ணிக்க ரூ.890லிருந்து ரூ.930 ஆகவும், மாதாந்திர கட்டணம் ரூ.17,820ல் இருந்து ரூ.18,555 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.மேலும் பள்ளி பேருந்துகளுக்கு மாதாந்திர கட்டணம் ரூ.1000மும், உள் ளூர்வாகனகட்டணம் வகைகளான மாதாந்திர பாஸ் ரூ.150 மற்றும் ரூ.300 ஆகியவை எந்தவித மாற்றமின்றி வசூலிக் கப்படவுள்ளது. இந்த ஆண்டு புதிய கட்டண உயர்வில் சிறிய மாற்றம் மட்டும் செய்து மாதாந் திர கட்டணத்தில் சற்று உயர்த்தி நகாய் அறிவித்துள்ளது குறிப்பிடத்தக் கது.

# கேஸ் சிலிண்டர் இகே ஒய் சிக்கு காலக்கெடு இன்றுடன் நிறைவு

சென்னை, ஆக. 24

தமிழகம் முழுவதும் சமையல் எரிவாயு சிலிண்டர் வாடிக்கையாளர்கள் மேற்கொள்ள வேண்டிய மின்னணு சரிபார்ப்பு பதிவுக்கான காலக்கெடு இன்றுடன் நிறைவடைகிறது.காலக்கெடு இன்றுடன் நிறைவுஇதுவரை தமிழகத்தில் சுமார் 85 சதவீத கேஸ் சிலிண்டர் வாடிக்கையாளர்கள் மின்னணு சரிபார்ப்பு பதிவை முடித்துள்ளதாக கூறப்படுகிறது. அதே நேரத்தில், இன்னும் 15 சதவீதத்துக்கும் மேற்பட்டோர் இந்தப்பதிவை மேற்கொள்ளாமல்இருப்பதாகதகவல்வெளியாகியுள்ளது. இதனால், மின்னணு சரிபார்ப்பு பதிவு செய்யாத வாடிக்கையாளர்கள் நாளை முதல் சிலிண்டர் முன்பதிவு செய்வதில் சிக்கல் ஏற்படுமா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. வாடிக்கையாளர்களுக்கு அறிவுறுத்தல்தமிழகத்தில் சமையல் எரிவாயு சிலிண்டர் பயன்படுத்தும் வாடிக்கையாளர்களில் 85 சதவீதம் பேர் இதுவரை மின்னணு சரிபார்ப்பு பதிவை நிறைவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 15 சதவீதம் பேர் இன்னும் பதிவு செய்யவில்லை. தமிழகத்தில் இந்த எண்ணிக்கை 50 லட்சத்துக்கும் அதிகமாக இருக்கும் என கூறப்படுகிறது. இதனால், காலக்கெடு முடிவதற்கு முன்பாக தங்களது மின்னணு சரிபார்ப்பு பதிவை முடித்துக்கொள்ளுமாறு வாடிக்கையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.எரிவாயு நிறுவனத்தைன் அதிகாரப்பூர்வ செயலிசமையல் எரிவாயு விநியோக நிறுவனங்களின் செயலிகள் மூலமாகவும் மின்னணு சரிபார்ப்பு பதிவை மேற்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்கள் தாங்கள் பயன்படுத்தும் எரிவாயு நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ செயலியைத் திறந்து, அதில் வழங்கப்பட்டுள்ள மின்னணு சரிபார்ப்பு பதிவு வசதியைப் பயன்படுத்தி தங்களது விவரங்களைச் சரிபார்த்து பதிவு செய்யலாம்.

# ஊழல் செய்தால் மரண தண்டனை; முதல்அமைச்சர் விஜய்க்கு ஸ்ரீதர் வேம்பு பரிந்துரை

சென்னை, ஆக. 24




சோகோ நிறுவனர் ஸ்ரீதர் வேம்பு தனது எக்ஸ் தள பதிவில் கூறிஇருப்பதாவது:மரணதண்டனைநமதுமுதல்அமைச்சர் விஜய் அவர்களுக்கு நான் கூறும் ஆலோசனைகளில் ஒன்று, போதைப்பொருள் கடத்தல் மற்றும் உயர் மட்ட ஊழல் தொடர்பானசிங்கப்பூர்போன்றசட்டங்களைக்கொண்டுவர வேண்டும் என்பதாகும். சிங்கப்பூர், போதைப்பொருள் கடத்தல் மற்றும் உயர் மட்ட ஊழலுக்கு மரண தண்டனை வழங்குகிறது. அவர்கள் இந்தச் சட்டங்களை அமல்படுத்துகிறார்கள். இந்தியச் சூழலில், அமைச்சர் மட்டத்திலும், அகில இந்திய சேவை மட்டத்திலும் (ஐஏஎஸ், ஐபிஎஸ் போன்றவை) நாம் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்:1. ஊதியத்தை பெருமளவில் உயர்த்த வேண்டும்.2. எதிர்காலத்தில் நிகழும் எந்தவொரு ஊழலுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும். உரிய சட்ட நடைமுறைஊதியத்தை உயர்த்துவதும் சம முக்கியத்துவம் வாய்ந்தது. மேலும், கடந்த காலத்தைப் பற்றி முடிவில்லாமல் விவாதிக்காமல் இருப்பதற்காக, கடந்த கால தவறுகளுக்கு நாம் பொது மன்னிப்பு அறிவிக்க வேண்டும். முறையான ஆய்வு மற்றும் உரிய சட்ட நடைமுறைகளுக்குப் பிறகு நீதிமன்றங்கள் அதை அமல்படுத்த வேண்டும். ஆனால், உரிய சட்ட நடைமுறை என்பது 30 ஆண்டு கால தாமதத்தை குறிக்காது. சிங்கப்பூர் நீதிமன்றங்கள் மிகவும் திறமையானவை, நாம் அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளலாம். எனது வயது வந்த வாழ்க்கை முழுவதும் நான் லீ குவான் யூவின் தீவிர ரசிகனாக இருந்துள்ளேன், அவருடைய ஒவ்வொரு பேச்சையும் நான் படித்திருக்கிறேன்! நாம் அவருடைய அணுகுமுறையைப் படிக்க வேண்டும்.இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.க்

# அம்மை நோய் பாதித்தவர்கள் தங்கும் மண்டபம் தொடர்பாக பரவும் தகவல் தவறானது! அறநிலையத்துறை விளக்கம்


சென்னை, ஆக. 24




அம்மை வார்த்தவர்கள் தங்கும் மண்டபம் தொடர்பாக பரப்பப்படும் தகவல் தவறானது என இந்து சமய அறநிலையத்துறை விளக்கம் கொடுத்துள்ளது. இது தொடர்பாக தகவல் நம்பகத்தன்மை பிரிவு வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்தெரிவித்திருப்பதாவது; பரவும் செய்திஅம்மை தடுப்பூசியை குழந்தைகளுக்கு மருத்து வமனைகளில் வழங்க வழி செய்யாமல், அவர்களுக்காக மண்டபம் அமைக்கப்படுவதாக சமூக வலைதளங்களில்தவறானதகவல்பரப்பப்பட்டுவருகிறது. உண்மை என்ன?இது முற்றிலும் தவறான தகவல்.இது தொடர்பாக இந்து சமய அறநிலையத்துறை அளித்துள்ள விளக்கத்தில், "அன்பில் அருள்மிகு மாரியம்மன் திருக்கோவிலில் அம்மை வார்த்தவர்கள் குணமான பிறகு அவர்களின் பிரார்த்தனை மற்றும் நேர்த்திக்கடனுக்காக திருக்கோவிலில் தங்கி வழிபடுவதற்காக மண்டபம் வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று அறிவிக்கப்பட்ட இந்த அறிவிப்பை சிலர் திட்டமிட்டு அம்மை வார்த்தவர்கள் மற்றவர்களுக்கு பரவும் வகையில் இங்கு தங்குவதற்காக இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதுஎனதவறாகசித்தரித்துஉண்மைக்கு புறம்பாக பரப்புகிறார்கள்"என தெரிவிக்கப்பட்டுள்ளது. தவறான தகவலைப் பரப்பாதீர் !இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கூடலூரில் இரவு நேரத்தில் உலா வரும் காட்டு யானை பொதுமக்கள் அச்சம்

நீலகிரி, ஆக. 24



நீலகிரிமாவட்டம்கூடலூரில்குடியிருப்பு பகுதிக்குள் இரவு நேரத்தில் உலா வரும் காட்டு யானையால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர். இதனை அங்கிருந்த குடியிருப்புவாசி ஒருவர் தனதுசெல்போனில்படம்பிடித்துள்ளார். இரவு நேரத்தில் குடியிருப்பு பகுதிக்குள் பிரம்மாண்ட உருவத்துடன் வலம் வந்த காட்டு யானை, பொதுமக்களின் சத்தத்தை கேட்டதும் மெதுவாக அங்கிருந்து நகர்ந்து சென்றது. தொடர்ந்து யானைகள் ஊருக்குள் வருவதால் வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஏற்கனவே கூடலூர் பகுதியில் கடந்த ஒரு மாதத்தில், வனப்பகுதிக்குள் இருந்து ஊருக்குள் நுழைந்த புலி தாக்கி 2 விவசாயிகள் உயிரிழந்துள்ளனர். மனிதர்களை வேட்டையாடும் புலியை கூண்டு வைத்து சீக்கிரமாக பிடிக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வரும் நிலையில், தற்போது காட்டு யானை ஊருக்குள் உலா வருவது மேலும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இருப்பினும் வனத்துறையினர் தொடர்ந்து டிரோன் கேமராக்கள் மற்றும் மோப்ப நாய்கள் உதவியுடன் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருவதால், பொதுமக்கள் அச்சமடைய வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# வேலூர்: முகவரி கேட்பது போல் நடித்து பெண்ணிடம் 3 பவுன் நகை பறிப்பு

வேலூர், ஆக. 24

வேலூர் மாவட்டம் காங்கேயநல்லூரை சேர்ந்தவர் சேகர் (வயது 63) நெசவுத் தொழிலாளி. இவரது மனைவிதனலட்சுமி(60)நேற்றுமுன்தினம்வேலூரில் இருந்து மோட்டார் சைக்கிளில் மனைவியை அழைத்துக் கொண்டு சென்னை பல்லாவரம் அடுத்த அனகாபுத்தூரில் உள்ள மகன் வீட்டுக்கு சென்று கொண்டிருந்தார்.காஞ்சீபுரம்மாவட்டம்சோமங்கலம் அருகேஉள்ளஅமரம்பேடு பகுதியை கடந்து செல்லும் போது மழை பெய்ததால் சாலையோரம் மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு ஒதுங்கி நின்றனர். மோட்டார்சைக்கிளில்பின்தொடர்ந்து வந்த மர்ம நபர் மழைக்கு ஒதுங்கி நின்ற கணவன்மனைவி அருகே வந்து முகவரி கேட்பது போல் கேட்டு தனலட்சுமி அணிந்து இருந்த 3 பவுன் தங்கச்சங்கிலியை பறித்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் மின்னல் வேகத்தில் தப்பிச் சென்று விட்டார். இது குறித்து சோமங்கலம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

# கள்ளக்குறிச்சியில் மார்க்சிஸ்ட் தலைவர்கள் மீதான கொலைவெறித் தாக்குதல் பெ. சண்முகம் கண்டனம்

உளுந்தூர்பேட்டை, ஆக. 24



மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாலர் பெ. சண்முகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை அருகே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் தோழர் டி.எம். ஜெய்சங்கர், முன்னாள் மாவட்டச் செயலாளர் தோழர் டி.எழுமலை, மாவட்டக்குழு உறுப்பினர்தோழர்டி.எஸ்.மோகன்மற்றும் கார்ஓட்டுநர் ஆகியோர் மீது சமூக விரோதிகள் நடத்தியுள்ள கொடூரமான தாக்குதலுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின்தமிழ்நாடுமாநிலசெயற்குழுகடும்கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.கொலைவெறி தாக்குதல்உளுந்தூர்பேட்டையில் நடைபெறவிருந்த போராட்டத்திற்கான தயாரிப்பு பணிகளை முடித்துவிட்டு, ஆகஸ்ட் 21 அன்று இரவு கிளியூர் கிராமத்தைக் கடந்து காரைநிறுத்தியிருந்தபோது, வடமாம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த 8 பேர் கொண்ட கும்பல் கட்சித் தலைவர்களையும், கட்சியின் பெயரையும் மிக அசிங்கமாக திட்டி, காரிலிருந்த கட்சிக் கொடி மற்றும் கண்ணாடிகளை அடித்து நொறுக்கியுள்ளனர். மேலும், தோழர்கள் அனைவரையும் கொலைவெறியோடு தாக்கியுள்ளனர்.மார்க்சிஸ்ட் போராட்டம்வடமாம்பாக்கம் கிராமத்தின் முன்னாள் ஊராட்சிமன்றத்தலைவர், 'பிரதமர்வீடுகட்டும்திட்டத்தின்' கீழ் 22 வீடுகளை கட்டாமலே அவராகவே பணத்தை எடுத்துக் கொண்டு மக்களை ஏமாற்றியுள்ளார். இதற்கெதிராக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பாதிக்கப்பட்ட மக்களை திரட்டி போராட்டம் நடத்தியுள்ளது. மேலும் இப்பகுதி மக்களுக்காக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தோழர்கள் போராடி வருகின்றனர். இதை மனதில் வைத்துக் கொண்டு, ஆத்திரமடைந்த முன்னாள் ஊராட்சிமன்றத் தலைவரின் மகன்கள் இருவர் உட்பட 8 பேர் கொண்ட கும்பல் திட்டமிட்டு இந்த வன்முறை மற்றும் கொலைவெறித் தாக்குதலில் ஈடுபட்டுள்ளது.உரிய தண்டனைஇச்சம்பவம் குறித்து களமருதூர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டும். காயமடைந்த தோழர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய நிலையில், காவல்துறை இதுவரை ஒரே ஒருவரை மட்டுமே கைது செய்துள்ளது. பொதுமக்களுக்கு ஆதரவாகப் போராடும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களை குறிவைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் சம்பந்தப்பட்டவடமாம்பாக்கம்முன்னாள்ஊராட்சிமன்றத் தலைவரின் மகன்கள் இருவர் உள்ளிட்ட அனைத்து குற்றவாளிகளையும் காவல்துறை உடனடியாகக் கைது செய்து, கடுமையான சட்டப் பிரிவுகளின் கீழ் உரிய தண்டனை பெற்றுத்தர வேண்டுமென தமிழ்நாடு காவல்துறையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு வலியுறுத்துகிறது.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தின கனி
NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253
24.08.2026

# காரை சேதப்படுத்திய காட்டு யானை

ஊட்டி, ஆக. 24

நீலகிரி மாவட்டம் கூடலூரில் இருந்து மைசூர் செல்லக்கூடிய தொரப்பள்ளி சாலையில், சுற்றுலாப் பயணிகளின் காரை காட்டு யானை ஒன்று ஆக்ரோஷமாக தாக்கிய வீடியோ வெளியாகி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.காட்டு யானைக்கூட்டம்நீலகிரி மாவட்ட வனப்பகுதிகளில் தற்போது காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுகிறது. இந்நிலையில், கூடலூர் மைசூர் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள தொரப்பள்ளி பகுதியில், குட்டிகளுடன் கூடிய காட்டு யானைக்கூட்டம் ஒன்று சாலையை கடக்க முயன்றது. சாலையோரம்அப்போது, அந்த வழியாக வந்த சுற்றுலாப் பயணிகளின் கார் ஒன்று யானைகள் கடப்பதற்காக சாலையோரம் நிறுத்தப்பட்டது.குட்டிகளுடன்சாலையை கடந்த யானைகளில், ஒரு காட்டு யானை திடீரென ஆக்ரோஷமடைந்தது.காரின் முன்பகுதி சேதம்கண்ணிமைக்கும் நேரத்தில் பாய்ந்து வந்த அந்த யானை, நிறுத்தப்பட்டிருந்தசுற்றுலாப்பயணிகளின் காரை நோக்கி ஓடிவந்து, தனது தும்பிக்கை மற்றும் தந்தங்களால் காரின் முன்பகுதியை ஆக்ரோஷமாக முட்டி தள்ளியது. இதில் காரின் முன்பகுதி அப்பளம்போல் நொறுங்கி பலத்த சேதமடைந்தது.உயிர் தப்பினர்காரின் உள்ளே இருந்த பயணிகள் பயத்தில் அலறியடித்தபடி உள்ளேயே முடங்கினர். அதிர்ஷ்டவசமாக அவர்கள் காரைவிட்டு கீழே இறங்காததால், எந்தவித காயமுமின்றிநல்வாய்ப்பாகஉயிர்தப்பினர். வைரல் வீடியோயானை காரை தாக்கும் இந்தத் திக் திக் காட்சிகள், பின்னால் வந்த வாகனத்தில் இருந்தவர்களால் வீடியோ எடுக்கப்பட்டு, தற்போது சமூக வலைத்தளங்களில் வெளியாகி பார்ப்போரை பதற வைத்து வருகிறது. வனப்பகுதி சாலைகளில் பயணிக்கும் போது, யானைகள் சாலையை கடந்தால் வாகனங்களை தூரத்திலேயே நிறுத்த வேண்டும்என்றும், எக்காரணம்கொண்டும் காரை விட்டு கீழே இறங்கவோ, செல்பி எடுக்கவோ கூடாது என வனத்துறையினர் பொதுமக்களுக்குக் கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# 'அறநிலையத்துறையின் செயல்பாடுகள் குறித்து சேகர்பாபு வேவு பார்க்க வேண்டிய அவசியம் என்ன?' அமைச்சர் ரமேஷ் கேள்வி



திருச்சி, ஆக. 24

தமிழக அரசின் இந்து சமயஅறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ், திருச்சியில் இன்று செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது; "எங்கள் மீது எந்த தவறும் கிடையாது, நாங்கள் மிகவும் வெளிப்படையாக இருக்கிறோம் என்றெல்லாம் சொல்லும் முன்னாள் அமைச்சர் சேகர்பாபு, இந்த ஆட்சியில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து விசாரிக்க வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது?நாங்கள் எந்த கோவில்களில் எல்லாம் ஆய்வு செய்கிறோம்? என்னென்ன செயல்பாடுகளை மேற்கொள்கிறோம்? என்பதையெல்லாம் அதிகாரிகளை வைத்து வேவு பார்த்து, அதை சட்டமன்றத்தில் பேசுவது தவறு கிடையாதா? தன் மீது எந்த தவறும் இல்லை என்றால், அரசாங்க விஷயங்களை அவர் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நினைப்பது ஏன்?மடியில் கனம் இருந்தால்தான் இது போன்ற வேலைகளை எல்லாம் செய்ய வேண்டியிருக்கும். அரசு துறைக்குள் என்ன நடக்கிறது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும் என நினைக்கிறார்கள் என்றால் இவர்கள் எவ்வளவு தவறுகளை செய்திருப்பார்கள் என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும். நாம் செய்த தவறுகளை இந்த ஆட்சியில் கண்டுபிடித்துவிடுவார்களோ என்ற பயம் இவர்களுக்கு இருக்கிறது. அந்த பயம்தான் எங்கள் ஆட்சிக்கு கிடைத்த முதல் வெற்றி."இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# கேரளாவில் 17 டன் ரேஷன் அரிசி பறிமுதல்; வருவாய் ஆய்வாளரை தாக்கிய கும்பலுக்கு வலைவீச்சு

கன்னியாகுமரி, ஆக. 24

கேரள எல்லைக்குள் 17 டன் ரேஷன் அரிசியை பறிமுதல் செய்ய முயன்றபோது, வருவாய் ஆய்வாளரை தாக்கிவிட்டு, கொலை மிரட்டல் விடுத்து தப்பி ஓடிய கும்பலை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.வாகன சோதனைகன்னியாகுமரிமாவட்டம்,களியக்காவிளையில் பறக்கும் படை தாசில்தார் பாரதி தலைமையிலான அதிகாரிகள்வாகனசோதனையில்ஈடுபட்டனர்.அப்போது நிற்காமல் சென்ற மினி லாரியைத் துரத்திச் சென்றனர். அந்த லாரி கேரள எல்லைக்குள் இஞ்சிவிளையில் உள்ள அரிசி குடோனுக்குள் சென்றது.அதிகாரிகள் அந்த குடோனை சோதனையிட முயன்றபோது, அங்குள்ள கும்பல் வருவாய் ஆய்வாளர் தினேஷ் என்பவரை தாக்கிவிட்டுகொலைமிரட்டல்விடுத்துத்தப்பியோடியது. இருமாநில போலீசார்நடத்திய சோதனையில், குடோனில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த 17டன்ரேஷன்அரிசி பறிமுதல் செய்யப்பட்டது. தலைமறைவான கும்பலை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

# நள்ளிரவில் வீடு புகுந்து இளம்பெண்ணிடம் தவறாக நடக்க முயன்ற ரவுடி கைது

சென்னை, ஆக. 24

சென்னை வேளச்சேரி பகுதியில் நள்ளிரவில் வீடு புகுந்து, தூங்கிக் கொண்டிருந்த இளம்பெண்ணிடம் தவறாக நடக்க முயன்ற ரவுடியை போலீசார் கைது செய்தனர்.இளம்பெண்ணிடம் தப்பாக நடக்க முயன்ற நபர்சென்னை வேளச்சேரி பகுதியைச் சேர்ந்த 25 வயது இளம்பெண், தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். தனது தந்தையுடன் வசித்து வரும் இளம்பெண், நேற்று முன்தினம் இரவு வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தார். நள்ளிரவில் மர்ம நபர் ஒருவர் அவரது வீட்டுக்குள் புகுந்து இளம்பெண்ணிடம் தவறாக நடக்க முயன்றார்.மர்ம நபர் தப்பி ஓட்டம்அதிர்ச்சியடைந்த இளம்பெண் கூச்சலிட்டார். உடனே அந்த மர்ம நபர், சத்தம் போட்டால் கொலை செய்து விடுவேன் என மிரட்டினார். அதற்குள் மகளின் அலறல் சத்தம் கேட்டு பக்கத்து அறையில் இருந்து தந்தை எழுந்து வந்ததால் அந்த மர்ம நபர் தப்பி ஓடிவிட்டார்.ரவுடி கைதுஇதுகுறித்த புகாரின்பேரில் வேளச்சேரி போலீசார் வழக்குப்பதிவு செய்து, அந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா காட்சி பதிவுகளை ஆய்வு செய்தனர். அதில் இளம்பெண்ணிடம் தவறாக நடக்க முயன்றது அதே பகுதியை சேர்ந்த பாலுசாமி (வயது 28) என்பதும், ரவுடியான அவர் சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும் தெரியவந்தது. பின்னர் பாலுசாமியை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# இன்றைய ராசி பலன்கள் (24.08.2026)

**மேஷம்:** இன்று நாள் முழுவதும் உற்சாகம் நிறைந்திருக்கும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் தேடிவரும்.

**ரிஷபம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியும் சுபச் செய்திகளும் வந்து சேரும். நிதி நிலைமை சீராக இருக்கும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனம்:** பேச்சில் நிதானம் தேவை. தேவையில்லாத வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. பிற்பகலுக்கு மேல் எதிர்பார்த்த நல்ல தகவல்கள் வரக்கூடும்.

**கடகம்:** திட்டமிட்ட வேலைகளை எளிதாக முடிப்பீர்கள். பண வரவு திருப்திகரமாக இருக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளுக்கு சாதகமான நாள். தொழில் வளர்ச்சி அடையும். கடன் பிரச்சனைகள் குறைய வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.

**கன்னி:** நீண்ட நாட்களாக தடைபட்ட காரியங்கள் சிறப்பாக முடிவடையும். பணியிடத்தில் பாராட்டுக்கள் கிடைக்கும். குடும்பத்தில் அனுகூலமான சூழல் நிலவும்.

**துலாம்:** சுபச் செலவுகள் ஏற்படக்கூடும். பயணங்கள் செல்ல நேரிடலாம். மனதில் அமைதியும் தெளிவும் உண்டாகும். நிதானமாகச் செயல்படுவது நல்லது.

**விருச்சிகம்:** பொருளாதார ரீதியாக சிறப்பான நாள். எதிர்பாராத தனலாபம் கிடைக்கும். தொட்ட காரியங்கள் அனைத்திலும் வெற்றி உண்டாகும்.

**தனுசு:** உத்தியோகத்தில் பொறுப்புகளும் முன்னேற்றமும் கூடும். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். தந்தையின் வழியில் ஆதாயம் உண்டாகும்.

**மகரம்:** ஆன்மீக காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். தொலைதூரச் செய்திகள் அனுகூலமாக இருக்கும். தொழில் ரீதியான அலைச்சல் குறையும்.

**கும்பம்:** வாகன பயணங்களில் எச்சரிக்கை தேவை. அறிமுகம் இல்லாதவர்களிடம் கவனமாகப் பழகுவது நல்லது. மாலையில் நல்ல மாற்றம் உண்டாகும்.

**மீனம்:** கணவன்மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். கூட்டு வியாபாரத்தில் லாபம் ஈட்டுவீர்கள். பிரிந்த நண்பர்கள் மீண்டும் இணைய வாய்ப்புள்ளது.

# 15 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை: போக்சோ சட்டத்தில் வாலிபர் கைது



நீலகிரி, ஆக. 24

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணியை சேர்ந்தவர் நாகராஜ்(வயது 20). இளங்கலை பொருளாதாரம் படித்து வந்த இவர், சில காரணங்களுக்காக படிப்பை பாதியில் விட்டார். பின்னர் கிடைக்கும் வேலைக்கு சென்று வந்தார். இவருக்கு, சமூக வலைத்தளம் மூலம் நீலகிரி மாவட்டம் ஊட்டியை சேர்ந்த 15 வயது சிறுமி அறிமுகம் ஆனார். அவர்கள் நீண்ட நாட்களாக பேசி பழகி வந்தனர். இந்த பழக்கம் நாளடைவில் காதலாக மாறியது. பின்னர் நாகராஜ் அவ்வப்போது ஊட்டி வந்து அந்த சிறுமியை சந்தித்து வந்தார்.

இந்தநிலையில்கடந்தசிலநாட்களுக்கு முன்பு அந்த சிறுமி திடீரென வீட்டில் இருந்துமாயமானார்.இதனால்அதிர்ச்சி அடைந்த பெற்றோர் உட னடியாக ஊட்டி மேற்கு போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர்.அதன்பேரில் போலீசார் விசாரணை நடத்தினர். அப்போது செல்போன் சிக்னல் மூலம் நாகராஜ், ஊட்டியில் உள்ள ஒரு தனியார் விடுதி யில் தங்கி இருப்பது தெரியவந்தது. இதைத்தொடர்ந்து போலீசார் அங்கு விரைந்து சென்றனர். அந்த விடுதியில் சிறுமியும்இருந்தார்.உடனேசிறுமியை போலீசார் மீட்டனர். பின்னர் நடந்த விசாரணையில் திரு மணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி அந்த சிறுமியை நாக ராஜ் பாலியல் பலாத்காரம் செய்தது தெரியவந்தது. இதைத்தொடர்ந்துபோலீசார்போக்சோ சட்டத்தில் வழக்குப்பதிந்து நாகராஜை கைது செய்தனர். அவர் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

# இலங்கைக்கு எதிரான கடைசி டெஸ்ட்: முதல் நாள் ஆட்ட நேர இறுதியில் 300/5; வலுவான நிலையில் இந்தியா



இலங்கைக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்ட நேர இறுதியில், 85 ஓவர் முடிவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு இந்தியா 300 ரன்கள் எடுத்துள்ளது.இந்திய கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர்களில் விளையாடி வருகிறது. கடந்த 15ந்தேதி நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கையை 165 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்தியா அபார வெற்றி பெற்றது.இந்தியா பேட்டிங்இந்நிலையில் இந்தியா மற்றும் இலங்கை இடையேயான 2வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி இலங்கை தலைநகர் கொழும்புவில் இன்று தொடங்கியது. இதில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பேட்டிங் செய்வது என முடிவு செய்தது.இதில், தொடக்க ஆட்டக்காரர்களான ஜெய்ஸ்வால் (45), கே.எல். ராகுல் (18) ஆட்டமிழந்ததும், விளையாட வந்த தேவ்தத் படிக்கல் அரை சதம் விளாசினார். பின்னர் தொடர்ந்து விளையாடிய அவர், 168 பந்துகளில் 10 பவுண்டரிகளுடன் சதம் விளாசினார். இந்த தொடரில் அவருடைய 2வது சதம் இதுவாகும்.ஆட்ட நேர இறுதியில்கேப்டன் சுப்மான் கில்லும் அரை சதம் விளாசினார். அவர்108பந்துகளில்6பவுண்டரிகளுடன்50ரன்கள்எடுத்திருந்தபோது,நிரோஷனிடம்கேட்ச்கொடுத்துவெளியேறினார். விக்கெட் கீப்பர் ரிஷப் பண்ட் 3 ரன்கள் எடுத்தபோது ரிட்டையர்ட் ஹர்ட் ஆனார். ரவீந்திர ஜடேஜாவும், படிக்கல்லும் தொடர்ந்து விளையாடினர்.எனினும், படிக்கல் 12 பவுண்டரிகளுடன் 193 பந்துகளில் 117 ரன்கள் எடுத்தபோது, நுவந்தவின் பந்து வீச்சில் போல்டானார். ரவீந்திர ஜடேஜா 43 ரன்களில் வெளியேறினார். முதல் நாள் ஆட்ட நேர இறுதியில், 85 ஓவர் முடிவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு இந்தியா 300 ரன்கள் எடுத்துள்ளது.துருவ் ஜுரெல் (7), சரண்ஷ் ஜெயின் (4) ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளனர். அசித பெர்னாண்டோ 3 விக்கெட்டுகளும், லஹிரு குமரா ஒரு விக்கெட்டும், கேஷரா நுவந்த ஒரு விக்கெட்டும் எடுத்துள்ளனர். இதனால், இந்தியா முதல் நாள் முடிவில் வலுவான நிலையில் உள்ளது.

# டெஸ்ட் தரவரிசையில் 6வது இடத்திற்கு தாவிய வங்காளதேசம்... பின்னுக்கு சென்ற 3 முன்னணி அணிகள்





சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ICC) வெளியிட்டுள்ள சமீபத்திய டெஸ்ட் தரவரிசையில் வங்காளதேச அணி 6வது இடத்தைபிடித்து புதிய வரலாற்று சாதனைபடைத்துள்ளது. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 11 என்ற கணக்கில் சமன் செய்ததைத் தொடர்ந்து, வங்காளதேச அணி தரவரிசையில் 3 இடங்கள் முன்னேறியுள்ளது. தற்போது 78 ரேட்டிங் புள்ளிகளுடன் 6வது இடத்தை பிடித்துள்ள வங்காளதேசம், டெஸ்ட் தரவரிசையில் இதுவரை 9வது இடத்திற்கு மேல் முன்னேறியதில்லை. இந்நிலையில், முதல்முறையாக 6வது இடத்தை பிடித்துள்ளது.இதன்மூலம்வெஸ்ட்இண்டீஸ்,பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய அணிகளை வங்காளதேசம் பின்னுக்கு தள்ளியுள்ளது.ஆஸ்திரேலிய மண்ணில் வரலாற்று வெற்றிஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரின் முதல் டெஸ்ட் போட்டியில் வங்கதேசம் 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.ஆஸ்திரேலிய மண்ணில்வங்கதேசம்பெற்றமுதல்டெஸ்ட்வெற்றிஇதுவாகும்.அந்தவெற்றியில்ஹசன்மஹ்மூத்6விக்கெட்டுகளையும், தன்சித் ஹாசன் தமீம் சதமும் அடித்து முக்கிய பங்காற்றினர்.2வது டெஸ்டில் ஆஸ்திரேலியா கம்பேக்2வது டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய அணி சிறப்பாக செயல்பட்டு இன்னிங்ஸ் மற்றும் 51 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை 11 என சமன் செய்தது.ஆஸ்திரேலியாவின் வெற்றியில் மிட்செல் ஸ்டார்க் முக்கிய பங்காற்றினார். அவர் போட்டியில் மொத்தம் 10 விக்கெட்டுகளை வீழ்த்தி ஆட்ட நாயகன் விருதை வென்றார்.இந்த தொடரை சமன் செய்ததன் மூலம் வங்கதேசம் டெஸ்ட் தரவரிசையில் 6வது இடத்திற்கு முன்னேறி வரலாறு படைத்துள்ளது.

# முதலாவது தகுதி சுற்று திருச்சிக்கு எதிராக டாஸ் வென்ற மதுரை பந்துவீச்சு தேர்வு



முதலாவது தகுதி சுற்று ஆட்டத்தில் திருச்சிக்கு எதிராக டாஸ் வென்ற மதுரை பந்து வீச்சு தேர்வு செய்துள்ளது. டிஎன்பிஎல்8 அணிகள் இடையிலான 10வது டிஎன்பிஎல் 20 ஓவர் கிரிக்கெட் தொடர் சென்னை சேப்பாக்கத்தில் உள்ள எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியத்தில் நடந்து வருகிறது. டி.என்.பி.எல். கிரிக்கெட் தொடரில் நேற்றுடன் லீக் சுற்று நிறைவடைந்தது.மதுரை திருச்சிஇன்று நடக்கும் இறுதிப்போட்டிக்கான முதலாவது தகுதி சுற்றில் மதுரை பாந்தர்ஸ் திருச்சி கிராண்ட் சோழாஸ் (இரவு 7.30 மணி) அணிகள் மோதுகின்றன.டாஸ்இந்நிலையில், இந்த ஆட்டத்திற்கான டாஸ் போடப்பட்டது. இதில் டாஸ் வென்ற மதுரை அணி பந்துவீச்சு தேர்வு செய்துள்ளது. அதன்படி, திருச்சி அணி முதலில் பேட்டிங் செய்ய உள்ளது.

# என்னுடைய சினிமா பயணம் தமிழில் இருந்துதான் தொடங்கியது ரவி தேஜா




தெலுங்கு திரையுலகின் முன்னணி நடிகர்களில் ஒருவரான ரவி தேஜா, ரசிகர்களால் 'மாஸ் மகாராஜா' என அன்புடன் அழைக்கப்படுகிறார். மைத்ரி மூவி மேக்கர்ஸ் சார்பில் சிவா நிர்வானா இயக்கத்தில் உருவான திரைப்படம் 'இருமுடி கட்டு'. ரவி தேஜா, பிரியா பவானி சங்கர் நடித்துள்ள இந்தப் படம் சமீபத்தில் வெளியாகி வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.இந்நிலையில், 'இருமுடி கட்டு' படத்தின் பத்திரிகையாளர் சந்திப்பு மற்றும் வெற்றி விழா சென்னையில் நடைபெற்றது. 'இருமுடி கட்டு' படம் 3 நாட்களில் ரூ.47 கோடி வசூலித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.தமிழ் மொழி மீது தீராத ஆர்வம்விழாவில் கலந்து கொண்டு பேசிய நடிகர் ரவி தேஜா, தனக்கும் தமிழ் மொழிக்கும் இடையிலான ஆழமான பிணைப்பு குறித்துப் பகிர்ந்து கொண்டார். தமிழ் மொழியின் மீது தனக்கு எப்போதுமே ஒரு தனித்துவமான ஈர்ப்பும், அதன் பேச்சு வழக்கில் இருக்கும் நகைச்சுவை மற்றும் இயல்பான அழகின் மீது மிகுந்த விருப்பமும் உண்டு என்று குறிப்பிட்டார்.தொடர்ந்து பேசிய அவர், "1990களின் நடுப்பகுதியில் தனது திரையுலக வாழ்க்கைக்கான ஆரம்ப கட்ட போராட்டங்கள் அனைத்தும் சென்னையிலேயே தொடங்கின என்பதை நினைவுகூர்ந்தார். சென்னை நகரம் தான் தனது சினிமா பயணத்தின் அடித்தளமாக விளங்கியது என்றும், இங்குள்ள மனிதர்களுடனும் திரையுலகத்துடனும் தனக்கு நீங்காத நினைவுகள் உண்டு" என்று நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

# 100வது நாளை நிறைவு செய்த சூர்யாவின் "கருப்பு" திரைப்படம்




சூர்யா நடிப்பில், ஆர்.ஜே. பாலாஜி இயக்கத்தில் வெளியான 'கருப்பு' திரைப்படம், திரையரங்குகளில் 100 நாட்களை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. படத்தின் வெற்றிக்கு நடிகர் சூர்யா நன்றி தெரிவித்துள்ளார். ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் தயாரிப்பில் கடந்த ஏப்ரல் மாதம் வெளியான 'கருப்பு' திரைப்படம், முதல் நாளிலிருந்தே ரசிகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றது. தமிழகம் மட்டுமல்லாமல் பல இடங்களிலும் வசூல் சாதனை படைத்த இப்படம், சூர்யாவின் திரைப்பயணத்தில் அதிக வசூல் செய்த திரைப்படங்களில் ஒன்றாக இடம்பிடித்துள்ளது. இத்திரைப்படம் கடந்த மே 15 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியானது.திரிஷா, சுவாசிகா, இந்திரன்ஸ், யோகி பாபு, ஷிவாதா, சுப்ரீத் ரெட்டி, அனகா மாயா ரவி மற்றும் நட்டி நட்ராஜ் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ள இந்தப் படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைத்துள்ளார். ரூ.350 கோடிக்கும் மேல் வசூல் செய்ததாக கூறப்படும் இப்படம், 100 நாட்களாக வெற்றிகரமாக திரையரங்குகளில் ஓடி வருகிறது.மேலும், ஓடிடி வெளியீட்டுக்குப் பின்பும் சில திரையரங்குகளில் கணிசமான ரசிகர்களும் படத்தைப் பார்க்க வருகின்றனர்.இந்நிலையில், 'கருப்பு' திரைப்படம் திரையரங்கங்களில் 100 நாளை நிறைவு செய்துள்ளது. இதனைக் குறிப்பிட்டு ட்ரீம் வாரியர்ஸ் தயாரிப்பு நிறுவனம், மாபெரும் வெற்றி என 'கருப்பு' சிறப்பு போஸ்டரை வெளியிட்டுள்ளது.நடிகர் சூர்யாவின் நெகிழ்ச்சி பதிவு'கருப்பு' திரைப்படம் 100 நாட்களைக் கடந்ததையொட்டி நடிகர் சூர்யா தனது சமூக வலைதளப் பக்கத்தில், "கண்ணுங்களா... செல்லங்களா... சாமிகளா... என் சாமிகளா! கருப்பு திரைப்படத்தை உங்கள் சொந்தப் படமாக ஏற்றுக்கொண்டு கொண்டாடியதற்கு கோடான கோடி நன்றிகள் இந்த மாபெரும் வெற்றி உங்கள் ஒவ்வொருவருக்கும் சொந்தமானது" என்று தனது நெகிழ்ச்சிப்பதிவை பகிர்ந்துள்ளார்.ஆர்.ஜே பாலாஜியின் பதிவுஇப்படத்தின் இயக்குநரும், முக்கியக் கதாபாத்திரத்தில் நடித்தவருமான ஆர்.ஜே. பாலாஜி, "ஒரு தேவதைக் கதைப் பயணத்தின் 100 நாட்கள் நிறைவடைந்துள்ளது. வெவ்வேறு நம்பிக்கைகள், வெவ்வேறு கலாச்சாரங்கள், வெவ்வேறு தலைமுறைகள், ஆனாலும், கருப்பு திரைப்படம் உலகெங்கிலும் உள்ள மக்களின் இதயங்களில் ஆழமாகப் பதிந்து வாழ்கிறது. இது ஒரு தலைமுறை பிளாக்பஸ்டர். நன்றி இறைவா..! நன்றி மக்களே.! இதைவிடச் சிறந்த வரவேற்பையும் அங்கீகாரத்தையும் கேட்டிருக்க முடியாது.! கருப்பா, என்னுடன் வா" என்று பதிவிட்டுள்ளார்.நீண்ட காலம் கழித்து 100 நாள்களை நிறைவு செய்யும் சூர்யா திரைப்படம் என்பதால் அவரது ரசிகர்கள் இதனைக் கொண்டாடி வருகின்றனர். சூர்யா நடிப்பில் வெளியான 'விஸ்வநாத் அண்ட் சன்ஸ்' திரைப்படம் வெற்றிப்படமாகி ரூ.200 கோடி வரை வசூலித்துள்ளது.

# பிரிவினை அரசியல் செய்ய நினைக்கும் நபர்கள் பேச்சை இளைஞர்கள் கேட்க வேண்டாம் நடிகர் யாஷ்

கீது மோகன்தாஸ் இயக்கத்தில் நடிகர் யாஷ் நடித்துள்ள திரைப்படம் 'டாக்ஸிக்'. இப்படத்தில் ருக்மிணி வசந்த், கியாரா அத்வானி, தாரா சுதாரியா, நயன்தாரா, ஹூமா குரேஷி போன்றோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். கேவிஎன் நிறுவனம் தயாரித்துள்ள இப்படம் ஆகஸ்ட் 26 அன்று திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இதன் பிரீரிலீஸ் நிகழ்ச்சி ஐதராபாத்தில் உள்ள மல்லா ரெட்டி பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று மிகப் பிரம்மாண்டமாக நடைபெற்றது. நிகழ்வில் படக்குழுவினர் உள்பட பிரபலங்கள் கலந்துகொண்டனர். அங்கு பேசிய நடிகர் யாஷ், "மிக விரைவாக இந்திய சினிமாவை உலக அரங்குகளுக்கு கொண்டு சென்று நிலை நிறுத்துவோம். இங்கு இளைஞர்களும் மாணவர்களும் இருக்கிறீர்கள். நீங்கள் சினிமாவை ஒருபோதும் மிகத் தீவிரமாக எடுத்துக்கொள்ளாதீர்கள். நாங்களெல்லாம் எதையும் பெரிதாக சாதித்துவிடவில்லை. ஆனால், நீங்கள் வாழ்வில் என்ன செய்ய விரும்புகிறீர்களோ, அதைக் கனவாகக் கொண்டு கடினமாக உழையுங்கள். வெற்றியும் மரியாதையும் நிச்சயமாக உங்களைத் தேடி வரும். எதிலாவது தோல்வியடைந்தால், அதற்காக உலகத்தைக் குறை சொல்லாதீர்கள்; அந்தத் தோல்விக்கு நாம் மட்டுமே பொறுப்பு. இளைஞர்களுக்கு ஒரு கோரிக்கை, இந்தியாவில் பல மாநிலங்கள் உண்டு அவரவர்கென ஒரு மொழி உண்டு. நம் மொழி மீது நாம் அன்பு வைத்திருக்கிறோம். ஆனால் இந்த காலகட்டத்தில் நாம் ஒன்றுபட வேண்டும். அதை உடைத்து அரசியல் செய்ய நினைக்கும் நபர்கள் பேச்சை நீங்கள் கேட்க கூடாது. வடக்கு, தெற்கு என்ற பிரிவுகள் வேண்டாம். நீங்கள் உழைத்தால், நாட்டில் எங்கு சென்றாலும் உங்களுக்கு அன்பும், மரியாதையும் கிடைக்கும். வேறு எங்கிருந்தும் இங்கு வந்து நல்ல உழைப்பை கொடுத்தால், நீங்களும் அன்பை கொடுப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது" என தெரிவித்துள்ளார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.